பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 25 புதன்கிழமை 11.12.2019 கதிர் 36

இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே நடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்பார்த்த விடயங்கள் பேசப்படாமையால் 'சப்' என்று முடிந்தது.

மீண்டும் யாழ்ப்பாணத்தில் கூடி நிலைமை பக்கம் 02 »

# இலங்கைக்குக் கொடுத்த கால அவகாசத்தை உடனடியாகவே முடிவுறுத்தவேண்டும் ஐ.நா.

## மனித உரிமைகள் ஆணையாளருக்கு மனு

யாழ்ப்பாணம்,டிசெ.11

நீதியையும் பொறுப்புக் கூறலையும் சாத்தியப்படுத்த அவசியமான அரசியல் விருப்பு இலங்கை அரசிடம் இல்லை என்பதால் ஐ.நா மனித உரிமைகள் சபையின் இனிவரும் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்திக் காணாமற்போனோரின் உறவினர்களால் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் அம்மையாருக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பக்கம் 03 »

# காணாமற்போனோரின் உறவுகள் கதறலால் அதிர்ந்த முல்லைத்தீவு!

## மனித உரிமைகள் தினத்தில் நேற்று ஒன்று திரண்டு கவனவீர்ப்புப் போர்



முல்லைத்தீவு, டிசெம்பர் 11

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்று திரண்டு மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணியை நடத் தினர். போராட்டத்தில் பங்கேற்றவர்களின் கதறல் அழுகைகளால் நேற்று சோகமயமானது அந்தப் பகுதி. பக்கம் 02 »

## மனித உரிமை ஆணைக் குழு முன் காணாமற்போனோரின் உறவுகள்!

### மனித உரிமைகள் தினத்தில் கவனவீர்ப்பு






யாழ்ப்பாணம், டிசெ. 11

காணாமற்போனவர்களின் உறவினர்கள் சர்வதேச மனித பக்கம் 03 »

## மொட்டா? கதிரையா?

### கூட்டணிக்குள் குடுமிப்பிடிச் சண்டை

கொழும்பு, டிசெ.11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட தொடங்கியுள்ளது.

இரு தரப்புகளிலுமுள்ள இரண்டாம் நிலை உறுப்பினர்களால் பக்கம் 03 »

## மல்லாவியில் இளைஞன் மீது அதிகாலை துப்பாக்கிச் சூடு!

முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவு – மல்லாவியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 25 வயதுடைய இளைஞன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தனிப்பட்ட காரணங் பக்கம் 03 »

## துன்னாலையில் சிசு கொலை; தாயாருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 11

துன்னாலை கிழக்கு குடவத்தைப் பகுதியில் இரண்டரை மாதக் கைக் குழந்தையைக்கிணற்றில் வீசிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப் பக்கம் 02 »

## முன்னாள் போராளிகள் நால்வர் மூதூரில் ரி.ஐ.டியினரால் கைது!

### ஆயுதங்களும் மீட்கப்பட்டனவாம்

திருமலை, டிசெ. 11

திருகோணமலை, மூதூர்ப் பிரதேசத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் நால்வர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ பக்கம் 02 »

## சுவிஸ் தூதரகப் பணியாளரிடம் நேற்றும் தொடர்ந்து விசாரணை

கொழும்பு, டிசெ. 11

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும், கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் உள்ளூர்ப் பணியாளரிடம் நேற்று மூன்றாவது நாளா பக்கம் 03 »

## கோட்டாபயவுக்கு வடமாகாண மக்கள் வாக்களிக்காமைக்குக் காரணம் நாமே!

### மஹிந்தவின் இளைய மகன் பகிரங்கக் கருத்து



கொழும்பு, டிசெ.11

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வடக்கு மாகாண மக்கள் வாக்களிக்காமைக்கான காரணம், வடக்கு மக்களின் பக்கம் 03 »

## கமால் குணரட்ன மீது புதிய போர்க்குற்றங்கள்!

### ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளது சர்வதேச உண்மை, நீதிக்கான திட்டம்



கொழும்பு, டிசெ. 11

புதிய பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவுக்கு பக்கம் 02 »

## வடக்கு ஆளுநர் விடயத்தில் அரசு அசமந்தம் என சம்பந்தன் விசனம்

கொழும்பு, டிசெ.11

வடக்கு மாகாணத்திற்கான ஆளுநர் நியமனம் தொடர்பில் அரசாங்கத்திற்குப் பலமுறை எடுத்துரைத்த போதும் அரசாங்கம் இது பக்கம் 03 »

## ஓ.எல். பரீட்சைக்கு சென்ற மாணவன் விபத்தில் சாவு!

### மற்றொருவர் படுகாயம்



வவுனியா, டிசெ. 11

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் நேற்று மோட்டார் சைக்கிள் ஒன்று தனியார் பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஜி.சீ.ஈ. பக்கம் 03 »

## துன்னாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்ட தாயாரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் பொ.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

அத்துடன் கொல்லப்பட்ட குழந்தையின் தாய் மற்றும் தந்தையின் குருதி மாதிரிகளைப் பெற்று பகுப்பாய்வுக்குட்படுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சந்தேகநபரான தாயாரின் உளநலம் தொடர்பில் உளநல மருத்துவ நிபுணரிடம் முற்படுத்திச் சான்றிதழைப் பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மன்று கட்டளையிட்டது.

வடமராட்சி, துன்னாலை குடவத்தைப் பகுதியில் இரண்டரை மாதம் நிரம்பிய அஜந்தராஜ் அஸ்ரின் என்ற பாலகன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கிணற்றில் வீசப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டான்.

சம்பவத்தையடுத்து சிசுவின் தந்தையும் தாயாரும் கைது செய்யப்பட்டனர். எனினும் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் தந்தையார் நேற்று முன் தினம் பிற்பகல் விடுவிக்கப்பட்டார். தாயார் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டார்.

சிசுவின் தந்தைக்கு 22 வயதும் தாய்க்கு 20 வயதுமாகும். அவர்களுக்கு 2 வயதில் ஆண் பிள்ளை ஒன்று உள்ளார். அந்தக் குழந்தைக்கு உடல் நலக்குறை உள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையில் சிசு தண்ணீருக்குள் மூச்சுத்திணறி உயிரிழந்தது என்று கண்டறியப்பட்டது. சிசுவின் உடலில் வெளித்தோற்றமாகவோ, உள்புறமாகவோ காயங்கள் எவையும் இல்லை எனவும் தெரிய வந்தது.

இந்த நிலையில் கொல்லப்பட்ட சிசுவின் தாயார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அதன்போது மேற்கண்டவாறான கட்டளைகளை மன்று வழங்கியது. (ஐ-07)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீள் உருவாக்கத்துக்கு முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர், சம்பூர் பகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை, இவர்கள் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டைப்பறிச்சான் தெற்கு, இறால்குழி, மகிழ்ச்சேனை பகுதிகளைச் சேர்ந்த இந்த நால்வரும் புனர்வாழ்வு பெறாத முன்னாள் போராளிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச புலனாய்வுச் சேவைக்குக் கிடைத்த தகவலை அடுத்து கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து, ரி-56 துப்பாக்கி – ஒன்று, மகசின்கள் – இரண்டு, ரவைகள் – 61, கிளைமோர் – ஒன்று, கைக்குண்டுகள் –மூன்று, டெட்டனேற்றர்கள்–மூன்று, 9 மி.மீ ரவைகள் – 31 என்பன கைப்பற்றப்பட்டன என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் நால்வரும், மேலதிக விசாரணைகளுக்காகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால், கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முல்லைத்தீவு இராயப்பர் தேவாலயத்துக்கு முன்பாக முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தக் கவனவீர்ப்புப் பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடைந்தது. இந்தப் போராட்டத்தில் வடக்கு –கிழக்கைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் பங்கெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் மத தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவப்பிரகாசம் சிவமோகன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டம் மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்ததும் அங்கு திரண்ட உறவுகள் பதாகைகளை உயர்த்திப் பிடித்தவாறு கதறி அழுது போராட்டம் நடத்தினர். சிலர் காணாமற்போன தமது பிள்ளைகளின் படங்களை அணைத்தவாறு வீதியில் விழுந்து கதறினர். இது அங்கிருந்தோரை மனம் உருக வைத்தது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் வருகை தந்து, மக்களிடம் ஐக்கிய நாடுகளுக்கான மகஜரைப் பெற்றுக் கொண்டு அதனை உரிய தரப்பினரிடம் அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தார். (ஐ)








## கமால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிராக புதிய போர்க் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பு, இது குறித்து பல விவரங்கள் அடங்கிய ஆவணமொன்றையும் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதற்கான வலுவான ஆரம்பகட்ட ஆதாரங்கள் உள்ளமையைப்போன்று கமால் குணரட்ணவுக்கு எதிராகவும் ஆதாரங்கள் உள்ளன எனச் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கை, போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்களை உயர் பதவிகளுக்கு நியமிப்பதன் மூலம் வேண்டுமென்றே தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை ஊக்குவிக்கின்றது எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கையின் புதிய பாதுகாப்புச் செயலாளராக கமால் குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளமை, சர்வதேசச் சட்டங்கள் மற்றும் மனித உரிமை தராதரங்களைப் பின்பற்றுகின்றன எனத் தெரிவிக்கும் நாடுகளுக்கு நீதிநெறி தொடர்பான இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஜஸ்மின் சூக்கா கூறியுள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் வெளியிட்டுள்ள புதிய ஆவணம் ஜோசப் முகாமுக்கு பொறுப்பாகக் காணப்பட்ட வேளை கமால் குணரட்ணவின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளது.

குறிப்பிட்ட முகாமில் பாதிக்கப்பட்ட பத்து பேரின் வாக்குமூலங்களையும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது ஆவணத்தில் பதிவு செய்துள்ளது.

இலங்கையின் புதிய பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ணவின் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது ஆவணத்தில் பதிந்துள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து போரை நிறுத்தவேண்டிய நிலையேற்படுவதைத் தவிர்ப்பதற்காக தாக்குதல்களை தீவிரப்படுத்துமாறு 2019 மே 14 ஆம் திகதி அப்போதைய பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ தனக்கும் சவேந்திர சில்வாவுக்கும் உத்தரவிட்டார் எனக் கமால் குணரட்ண தனது நூலில் குறிப்பிட்டுள்ளமையைச் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது ஆவணத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## கிளிநொச்சியில் கடை தீக்கிரை



கிளிநொச்சி ஏ-9 வீதியில் தனிநபர் ஒருவரின் இலத்திரனியல் கடையொன்று எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று அதிகாலை 6 மணி அளவில் இடம்பெற்ற மின் ஒழுக்கினால் தீ பிடித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் தனியார் கடையில் புகைமூட்டம் காணப்பட்டதை அடுத்து கடையின் உரிமையாளருக்கும் தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து தீயணைப்புப் பிரிவினர் அந்த இடத்திற்கு விரைந்து பலத்த போராட்டத்தின் மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதன்போது கடையில் இருந்த இலத்திரனியல் பொருட்கள் பகுதியளவு எரிந்து நாசமாகி உள்ளன. சுமார் 3 கோடி பெறுமதியான இலத்திரனியல் பொருள்கள் எரிந்துள்ளன எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகிறார்கள்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களை ஆராய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோர் சமுகமளிக்க முடியாமல் போனமையே காரசாரமாக நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட கூட்டம் 'சப்' என்று முடிந்து போனமைக்குக் காரணமாகும்.

முக்கிய பிரமுகர்கள் இருவரும் வருகை தராதமையால், முக்கிய விடயங்களும் பேசப்படாமல் தள்ளிப் போய்விட்டன.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு புளொட் சார்பில் அதன் தலைவர் சித்தார்த்தன், இராகவன், சிவநேசன் (பவன்), முரளி ஆகியோரும், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன் (ஜனா), சுரேன் ஆகியோரும், தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் துரைராஜசிங்கமும் சமுகமளித்தனர்.

நேற்று இப்பத்தியில் நான் சுட்டிக்காட்டியபடி சுமந்திரன் எம்.பி. கடுமையான இன்புளுவன்ஸ காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார். அதனால் அவரால் சமுகம் தர முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது.

மாவை சேனாதிராஜா எம்.பி. நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு மருத்துவப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். அவர் இந்தக் கூட்டத்துக்கு 5 மணிக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மருத்துவ பரிசோதனை மேலும் பல மணி நேரம் நீடிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டமையால் நேற்றைய கூட்டத்துக்குத் தாம் வருகை தரமுடியாது என்ற தகவலை வைத்தியசாலையிலிருந்தபடியே மாவை சேனாதிராஜா கூட்டத்தில் பங்குபற்றியோருக்குத் தெரிவித்தார்.

இரண்டு முக்கிய பிரமுகர்களும் சமுகம் தரமுடியாமையால் கூட்டத்தின் பிரதான பேசுபொருளான – தேர்தல் ஆசன ஒதுக்கீட்டுப் பிரச்சினையை – அக் கூட்டத்தில் பேசுவதில்லை என்றும், அது குறித்து அடுத்த கூட்டத்தில் ஆராயலாம் என்றும், பொதுவான விடயங்கள் குறித்து மட்டும் அப்போது பேசலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் நிலைமை குறித்து நேற்று விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

*"நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன் போன்றோரைக் கூட்டமைப்புக்குள் மீண்டும் இணைக்க முயற்சிக்கக் கூடாதா?"* – என்று செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சம்பந்தனிடம் நேற்றுக் கேட்டாராம்.

*"நிச்சயமாக. அவர்கள் வந்தால் அவர்களை அரவணைத்துக் கொள்வோம். நாங்கள் அவர்களை வெளியேற்றவில்லையே...? அவர்களும் எங்களுடன் இணைந்து நிற்க வேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோரினதும் விருப்பம்"* – என்று சம்பந்தன் பதிலளித்தாராம்.

அடுத்த 18ஆம் திகதி தமிழரசுக் கட்சி ஸ்தாபித்து எழுபது வருடங்கள். அதையொட்டிய நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் அன்றைய தினம் நடக்கவிருக்கின்றது.

அதற்காகத் தமிழரசுத் தலைகள் எல்லாம் யாழ்ப்பாணம் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அச்சமயம் – பெரும்பாலும் அடுத்த 17ஆம் திகதி – கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் கூட்டி, முக்கிய விடயங்களை அங்கு ஆராய்வது என நேற்று தீர்மானிக்கப்பட்டதாம்.

அன்றைய தினம், வரும் பொதுத் தேர்தலில் பங்காளிக் கட்சிகளுக்கான ஆசன ஒதுக்கீடு குறித்துப் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*"படித்த இளம் ஆள்களுக்கே இம்முறை வாயப்பு என்று சம்பந்தன் ஐயா கூறியிருக்கின்றாரே. உண்மையா?"* – என்று நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றிய ஒரு முக்கிய பிரமுகரிடம் கேட்டேன்.

*"இருக்கலாம். ஆனால் அப்படி என்றால் ஒன்றில் அவர் இந்தத் தடவை தாம் தேர்தலில் நிற்பதில்லை என்று முடிவு செய்திருக்கின்றார். அல்லது தம்மை இன்னும் இளம் ஆள் என்றுதான் நினைத் துக் கொண்டிருக்கின்றார்."* – என்று சிரித்துக் கொண்டே கூறினார் அந்தப் பிரமுகர்.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே....?

- மின்னல் -

காலைக்கதிர் Kalaikathir



## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மனுவில் ஐந்து அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த மனு நேற்றுக் காணாமற்போனோரின் உறவினர்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கையளிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அதன் பின்னர் இந்த மனு கையளிக்கப்பட்டது.

அந்த மனுவின் முழுமையான விவரம் வருமாறு:-

இன்று (நேற்று) டிசெம்பர் 10 சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் தங்களிற்கு இந்த மனுவைச் சமர்ப்பிக்கின்றோம்.

இலங்கையின் வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை காரணமாக கடந்த 10 வருடங்களுக்குமேலாக நீதிகிடைக்காது ஏங்கும் எமது மனவேதனையையும், ஆதங்கத்தையும் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்புப் போரின்போது அரச படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், மற்றும் போரின் இறுதி நாள்களில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்கள் போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் வெளிப்படுத்தப்படவில்லை. மேற்படி விடயத்தில் நீதிக்கான செயன்முறைகளில் முன்னேற்றம் இல்லாமலிருப்பது தொடர்பில் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

2009 இல் இலங்கை அரசு இனவழிப்பு ஒன்றின் மூலம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கி மூன், மூவர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை நியமித்தார். போரின்போது கடைப்பிடிக்க வேண்டிய சர்வதேசச் சட்டத்தின் அனைத்துப் பரிமாணங்களும், இலங்கையில் நடைபெற்று முடிந்த போரில் மீறப்பட்டுள்ளன என அந்த நிபுணர் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியது.

அதனைத் தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் சபை பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியது. மார்ச் 2014 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கையானது சர்வதேச நீதிபதிகள், வழக்கு தொடுநர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

2015 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சியில் ஏறிய பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் 30/1 இலங்கை அரசின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் இலங்கை அரசு மீளிணக்கம் சம்பந்தமாக ஓர் கலந்தாய்வு செயலணியைக் கண் துடைப்பிற்காக உருவாக்கியது. குறிப்பாக பரிந்துரைகள் ஓர் கலப்பு பொறிமுறை உருவாக்கத்தை வழிமொழிந்தன. எனினும் இவ்வறிக்கையானது அரசால் நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் செயன்முறைகளில் முற்றாகப் புறமொதுக்கப்பட்டன.

2016 இல் நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் மூலம் காணாமற்போனோர் அலுவலகம் திறக்கப்பட்டது. அந்த அலுவலகம் 2018 இல் இருந்தே நடைமுறைக்கு வந்தது. 2018 இல் ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவை வெறும் கண்துடைப்பிற்காகவே மேற்கொள்ளப்பட்டன.

காணாமற்போனோர் அலுவலகம் பல வழிகளில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு ஏமாற்றத்தையே தந்துள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களம் தொடர்ந்து ஆள்கொணர்வு மனுக்களில் பிரதிவாதிகளுக்கு – குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குச் சார்பாக அவர்களைப் பாதுகாக்கும் வகையில் தோன்றிவருகிறது.

ஒட்டு மொத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களை அரசு ஏமாற்றி வருகிறது. காணாமற்போனோர்களுக்கான அலுவலகம் (OMP) அமைச்சரவையின் முழுமையான கட்டுப்பாட்டில் இயங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அது சுயாதீனமற்றதாகவும் காணப்படுகின்றது.

தீர்மானம் 30/1 இல் உறுதிமொழி வழங்கப்பட்டவாறு வெளிநாட்டு வழக்கு தொடுநர்களை, நீதிபதிகளை நியமிக்கமாட்டோம் என முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளனர். இந்த நிலைப்பாட்டில்தான் தற்போதும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களுடன் சிங்கள பௌத்த பேரினவாதமும் உள்ளது.

எனவே, மேற்படி காரணங்களைச் சுட்டிக்காட்டி அரசுக்கு இனிமேலும் கால அவகாசம் வழங்க வேண்டாம் எனவும், முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணைக்குப் பரிந்துரைசெய்யுமாறும் கோரி, கடந்த ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடருக்கு முன்னர் இலங்கையின் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புக்கள், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புக்கள் மற்றும் ஏனைய ஒத்தகருத்துள்ள அமைப்புக்கள் மற்றும் நபர்களினால் இலங்கையில் நிலவிய சூழல் தொடர்பாகவும் சமாதானம் நீதி தொடர்பிலான செயன்முறைகளில் முன்னேற்றம் இல்லாமலிருப்பது தொடர்பிலும் கடிதம் ஒன்றும் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்தக் கடித்தில் வலியுறுத்தப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுத்து இனிவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் 2019 கூட்டத் தொடரில் நீங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையில் உள்ளடக்குவீர்கள் எனும் எதிர்பார்ப்பில் அக்கடிதம் தங்கள் மீது நம்பிக்கை கொண்டு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் எமது எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக, எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டமையானது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமான அரச உயர் மட்டத் தலைவர்களும், இராணுவ உயரதிகாரிகளும் பொறுப்புக் கூறலில் இருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்பளித்துள்ளது.

இதனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய எமக்கும் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தாங்கள் பின்வரும் நிகழ்ச்சி சார் தலையீடுகளை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடருக்கு முன்மொழிய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

சமர்ப்பிக்கும் அறிக்கையில் நீதியையும் பொறுப்புக் கூறலையும் சாத்தியப்படுத்த அவசியமான அரசியல் விருப்பு இலங்கை அரசிடம் இல்லை என்பதனால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இனிவரும் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென தாங்கள் முன்மொழிய வேண்டுமெனவும்,

இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு, போர்க்குற்றங்கள், மனிதத்துவதற்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் முழுமையான, சரவதேச – பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ளவேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் சபையானது ஐ.நா. செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்யத் தாங்கள் வலியுறுத்த வேண்டுமெனவும்,

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான ஐ.நா. குழு இலங்கையை முழுமையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐ.நா. செயலாளர் நாயகத்திற்குப் பரிந்துரைக்க வேண்டுமெனவும்,

இலங்கைக்கான விசேட ஐ.நா அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையை முன்மொழிய வேண்டும் எனவும்,

வடக்கு – கிழக்கில் நிலைவரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும், உறுதுணையாகவும் இருக்க ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஒன்றை வடக்கு – கிழக்கில் நிறுவும்படி வலியுறுத்த வேண்டும் எனவும் – தங்களைக் கோருகின்றோம். – என்றுள்ளது. (ஐ-07)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகள் தினமான நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வடக்கு-கிழக்கு காணாமற்போனவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தின்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கான மனு ஒன்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கில் உள்ள காணாமல் போனவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

## ஓ.எல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றச் சென்ற மாணவன் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு மாணவன் படுகாயமடைந்தார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பரீட்சை நிலையத்துக்கு வந்த மாணவர் ஒருவர் அவரின் அடையாள அட்டையை மறந்து வந்தால் அதனை எடுத்து வர மோட்டார் சைக்கிள் ஒன்றில் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

வவுனியா, ஆச்சிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த புண்ணிய குமார் பகீதரன் (வயது-16) என்ற மாணவனே விபத்தில் உயிரிழந்துள்ளார். அதிக வேகம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கக் கூடும் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மாணவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சுவிஸ் தூதரகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும் குற்ற விசாரணைத் திணைக்களத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டன.

கடந்த 25ஆம் திகதி பணி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனவும், பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார் எனவும் கூறப்படும் சுவிஸ் தூதரக உள்ளூர்ப் பணியாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றக் கட்டளைக்கு அமைய குற்ற விசாரணைத் திணைக்களத்தில் முதன் முறையாக முன்னிலையானார்.

கானியர் பனிஸ்டர் பிரான்சிஸ் என்ற சுவிஸ் தூதரகப் பணியாளரிடம், கடந்த ஞாயிறு மாலை 5 மணி தொடக்கம், நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி வரை சுமார் 9 மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இதையடுத்து, நேற்று முன்தினம் மீண்டும் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். நேற்று முன்தினம் பிற்பகல் விசாரணைக்கு முன்னிலையான அவரிடம், குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள், ஆறு மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரிடம் அனுப்பப்பட்டு மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

நேற்று மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்ட அவர் காலையில், குற்ற விசாரணைத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

நான்கு மணிநேரம் விசாரணைகள் நடத்தப்பட்டமையைஅடுத்து நேற்றுப் பிற்பகல் அவர் அங்கிருந்து வெளியேறினார்.

சுவிஸ் தூதரக அதிகாரிகளின் பாதுகாப்புடன், முகத்தை மூடி மறைத்தவாறு அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகி வருகிறார். அவருக்கு உதவியாக இரு சட்டவாளர்களும் சமுகமளித்து வருகின்றனர். (ஐ)

## கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறு அல்ல. அது நாங்கள் செய்த தவறுதான் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில் –

வடக்கில் எங்களுக்கு யாரும் வாக்களிக்கவில்லை. எனினும் அது, வடக்கு மக்களின் தவறு அல்ல. அது நாங்கள் செய்த தவறுதான். வடக்கில் வாழும் மக்களின் தேவைகளை அடையாளம் காணவில்லை. நாங்கள் அந்தத் தேவைகளை அறிந்துகொள்ள வேண்டும்.

அந்த மக்களின் மனங்களை வெல்ல நாம் என்ன செய்ய வேண்டும் எனத் திட்டமிட வேண்டும். தமிழ் மக்களினால் எங்களுக்குப் பயன் இல்லை எனச் சிந்திக்கும் அரசியல் மனநிலையே உள்ளது. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என்றால் இணைந்து செயற்படவேண்டும். அவர்களைப் பிரிக்கக்கூடாது. அவர்கள் தமிழர்கள், சஜித்தின் மக்கள் எனப் பிரிக்கக்கூடாது.

அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தவேண்டும். அனைவரும் இலங்கை மக்கள். தமிழர்களும் நாட்டின் மக்கள். அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதன் மூலம் சிறப்பான நாடு ஒன்றை உருவாக்க முடியும் – என்றார். (ஐ)

## வடக்கு ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஆர்வம் காட்டவில்லை என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வடக்கு ஆளுநர் நியமனம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு இன்னும் ஆளுநர் ஒருவரை நியமிக்காமல் அரசாங்கம் இழுத்தடிப்பதனால், பெரும்பாலான தீர்மானங்களை எடுப்பதற்கு முடியாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது.

இது தொடர்பில் பல்வேறு தடவைகள் அரசாங்கத்தை நினைவுபடுத்தினோம். வேறு மாகாணங்களுக்கு ஆளுநர்களை நியமிப்பதற்கு அரசாங்கத்துக்குள்ள ஆர்வம் வடக்கு மாகாண விடயத்தில் காணப்படாதுள்ளது.

ஆளுநர் நியமனத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக வருட இறுதியில் வழங்கப்படவுள்ள இடமாற்றங்கள், மாகாணத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் என்பன செயற்பட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது – என்று விசனம் வெளியிட்டுள்ளார் சம்பந்தன்.

## மல்லாவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காகவே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் பொலிஸார் கூறினர்.

காயமடைந்த இளைஞன், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ஐ)

## மொட்டா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவெளியில் முன்வைக்கப்பட்டுவரும் கருத்துகளே சர்ச்சைக்கு வழிவகுத்துள்ளன.

எனவே, இருதரப்புக்குமிடையில் விரைவில் சந்திப்பொன்று நடைபெறலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தலின் போது சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சுதந்திரக்கட்சி ஆதரவு வழங்கியது.

ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு சின்னத்திலும், பொதுத்தேர்தலில் கதிரை சின்னத்திலும் போட்டியிடவேண்டும் என்பது இதில் பிரதான அம்சமாகும். இது தொடர்பில் இருதரப்புக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர், பொதுத் தேர்தலிலும் மொட்டுச் சின்னத்திலேயே போட்டியிடுவோம் என மஹிந்த அணி உறுப்பினர்கள் சிலர் அறிவிப்பு விடுத்து வருகின்றனர்.

மொட்டுச் சின்னமே வெற்றியின் சின்னம் எனவும் பிரசாரம் செய்துவருகின்றனர். இதனால் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். வழங்கப்பட்ட வாக்குறுதி மீறப்படக்கூடாது என்பதிலும் குறியாக இருக்கின்றனர்.

அதேவேளை, ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது ஓரங்கட்டப்படுகிறார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இறுதி மூச்சு இருக்கும்வரை அரசியல் களத்தில் இயங்குவேன் என்ற அறிவிப்பை ஜனாதிபதி அண்மையில் விடுத்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஐ.தே.கவுக்கும் இனி ஒரே வழிதான்; அதுவே பேரினவாதப் பாதை!

*"... பேச்சு மூலம் இணக்கப்பாடு காணும் வழிமுறைக்கு சிங்கள அரசியல் தலைவர்களின் இனவெறிப் போக்குடைய அரசியல் அணுகுமுறை இடமளிக்கவில்லை. சிங்கள தேசத்தின் இனவாத அரசியல் அணுகுமுறையில் மாறி மாறி நிகழும் ஒரு வரலாற்றுப் பாங்காக, மாற்ற முடியாத ஒரு நடைமுறையாக, ஓர் உண்மையைக் கண்டு கொள்ளலாம். அதாவது ஆட்சிப் பீடம் ஏறும் கட்சி, தமிழர் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வுகாண முற்படும்பொழுது, எதிர்க்கட்சியாக விளங்கும் தரப்பு அம்முயற்சியை முறியடிக்கும் வகையில் தமிழர் விரோத உணர்வைத் தூண்டி விடும். இதன்படி, சிங்களத் தேசப்பற்றாளர்களாகத் தங்களை இனங்காட்டி, எதிராளிக் கட்சிக்காரனைக் காட்டிலும் தாம் கெட்டிக்காரர் என உயர்த்திக் காட்டி, அரசியல் லாபம் தேடும் ஒரு கீழ்த்தரமான அரசியல் நடைமுறையை சிங்கள அரசியல் கட்சிகள் மாறி மாறிக் கடைப்பிடிப்பது ஒரு வரலாற்று நியதியாகி விட்டது."*

– இது, சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது 'போரும் சமாதனமும்' நூலில் எழுதிய வாசகங்கள்.

அது, அன்றும், இன்றும், என்றும் கனகச்சிதமாகப் பொருந்தி நிற்கின்றமைதான் அவதானிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இப்போது தெற்கில் ஓர் ஆட்சி மாற்றம் வந்து விட்டது.

இதுவரை ஆட்சிக் கட்டில் இருந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு, தமிழர் தரப்புடன் சமரசம் செய்ய எண்ணி சமாதான எத்தனங்களில் – அமைதி முயற்சிகளில் – சமரச நடவடிக்கைகளில் – ஈடுபட்டது.

அதற்கு எதிராகப் பேரினவாத எழுச்சியைக் கிளப்பி விட்டு, அதில் அரசியல் நடத்தி, ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்து விட்டார்கள்.

இப்போது ராஜபக்ஷ தரப்பு தேசிய இனப்பிரச்சினை குறித்துப் பேசுகின்றது.

நாட்டின் அரசமைப்பைத் தனக்கு சாதகமாக மீளவும் மாற்றுவதில் 'விடப்பிடியாக' இருக்கும் அத்தரப்பு, அதற்குத் தேவையான நாடாளுமன்ற பெரும்பான்மையை ஈட்டிக் கெள்வதற்காகப் பல தரப்புக்களையும் தாஜா செய்யும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனுடனும் பேசுவது இதற்காகத்தான்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் – புதிய அரசு அமைத்ததும் – நாட்டின் அரசமைப்பை மாற்றுகின்றமை குறித்துப் பேசலாம் என சுமந்திரனுக்கு மஹிந்த சமிக்ஞை கொடுத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இனி என்ன? புதிய ஆட்சித் தரப்புடன் சமரசம் செய்து, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அத்தரப்புடன் பேச வேண்டிய கட்டாயம் தமிழர்களுக்கு ஏற்படும்.

அப்படி ஒரு நிலைமை நேர்ந்தால், சரித்திரம் மீளத் திரும்பும். இந்தப் பத்தியில் நாம் குறிப்பிட்ட மாதிரி – புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் கூறியுள்ளமை போன்று – ஒரு தென்னிலங்கைக் கட்சி பேச்சு மூலம் தீர்வு காண முயலுகையில் மற்றைய தென்னிலங்கைக் கட்சி, முறுக்கிக் கொண்டு இனவாதம் பேசி அதைக் குழப்பும்.

இப்போது அதைச் செய்வதற்கான முறை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குரியது.

பௌத்த, சிங்களப் பேரினவதத்தைக் கக்கிய பொதுஜன பெரமுன – சு.க. கூட்டுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாமல், ஜனாதிபதித் தேர்தலில் மிக மோசமான தோல்வியைச் சந்தித்த ஐ.தே.க., இனி தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் தப்பிப் பிழைத்து அரசியல் செய்வதாயின் அதே பௌத்த, சிங்களப் பேரினவாதத்தைத் தன் கையில் எடுப்பதே வாய்ப்பான ஒரேவழி எனத் தீர்மானிக்கின்றது போலும்.

மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்டமை போல, அந்த வழியைத்தான் ஐ.தே.க. நாடப் போகின்றது என்பதற்கு நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் அக்கட்சியின் இளைஞரணியுடன் தாம் நடத்திய கலந்துரையாடலின் போது ரணில் விக்கிரமசிங்க கூறிய கருத்தே நல்ல சான்று.

"ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து பார்க்கும் போது எமக்கு பௌத்த அடிப்படையிலான மத்திய வர்க்கத்தினதும், இளைய சமுதாயத்தினதும் வாக்குகள் கிடைக்கவில்லை என்பது தெளிவாகின்றது. எனவே இது குறித்து மாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடி எமது அடுத்த கட்ட செயற் திட்டங்களைத் தயாரிக்கவேண்டும்" – என்றார் ரணில் விக்கிரமசிங்க.

மகா நாயக்கர்களின் வழிகாட்டலில், இனவாதத்தைத் தூக்கப் போகின்றது ஐ.தே.கட்சி என்பதைப் புரிந்து கொள்வதற்கான முன்னறிவிப்புதான் இது....!

# அரச துறையில் உள்ள பலவீனங்களை உடனடியாகச் சரி செய்வது அவசியம்

## ஜனாதிபதி கோட்டாபய வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 11

முன்னேற்றமானதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் அரச துறையில் உள்ள அனைத்துப் பலவீனங்களையும் உடனடியாகச் சரி செய்ய வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சுக்களுக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய செயலாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு வலியுறுத்தினார்.

அரச சேவையை முறையாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுப்பதில் நவீன தொழிநுட்பத்தைக் கூடியளவு பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



அரச கட்டமைப்பை ஊழல் மோசடிகள் அற்ற சரியான பொறிமுறையாக நடைமுறைப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி கோட்டாபய இதன்போது விளக்கினார். (ஐ)

## மைதானத்தில் இளம் குடும்பஸ்தர் கொலை;

# எதிரிகள் தரப்பு விண்ணப்பம் நிராகரிப்பு; விளக்கத்தை விரைந்து நடத்தக் கட்டளை

யாழ்ப்பாணம், டிசெ. 11

வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 6 எதிரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகை மீது விளக்கம் நடத்தாமலே தள்ளுபடி செய்யவேண்டும் என்ற எதிரிகள் தரப்பு விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நிராகரத்து கட்டளையிட்டது.

அத்துடன், எதிரிகள் தரப்புக்கு வழங்கவேண்டிய ஆவணங்களை விரைவாக வழங்கி விளக்கத்தை காலதாமதமின்றி முடிக்குமாறு வழக்குத் தொடுநரான அரச சட்டவாதிக்கு மேல் நீதிமன்றம் அறிவுறுத்தியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடந்த ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 ஓவர்கள் துடுப்பாட்டப் போட்டி 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வட்டுக்கோட்டை பிக்னல் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டில் இரு தரப்பினருக்கு இடையே முறுகல் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது. கைகலப்பில் யாழ்ப்பாணம் பிரதான வீதியைச் சேர்ந்தவரும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனுமான ஜெயரட்ணம் டினோசன் அமலன் (வயது – 24) என்னும் ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் 9 பேர் வரை சரணடைந்தனர்.

மல்லாகம் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்றது. அதனையடுத்து 6 பேருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டின் கீழான குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

பொலிஸாரின் பெரும் குற்றத் தகவல் புத்தகங்களில் இடைச்செருகல்கள் இடம்பெற்றுள்ளன என அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் – புலனாய்வு விசாரணைகளில் திரிபுபடுத்தல்கள் உள்ளன. அதனால் இந்த வழக்கை விளக்கத்துக்கு எடுத்து நடத்துவதனால் நீதிக்குப் பங்கம் ஏற்படும் என்பதுடன் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது.

எனவே வழக்கை விளக்கத்துக்கு எடுக்காமல் எதிரிகளை விடுவித்து விடுதலை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு நீண்ட சமர்ப்பணத்தை முதலாவது எதிரி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கடந்த தவணையின்போது முன்வைத்தார்.

எனினும் எதிரி தரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பத்துக்கு ஆட்சேபனை தெரிவித்த அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன், விளக்கத்தை நடத்த மன்று கட்டளையிடவேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்து விளக்கத்தை நேற்று செவ்வாய்க்கிழமை கட்டளை வழங்குவதாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தவணையிட்டிருந்தது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் நேற்று கட்டளையை வழங்கினார்.

வழக்குத் தொடுனர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றில் முன்னிலையானார். முதலாவது எதிரிக்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன், இரண்டாவது எதிரி சார்பில் நளின், நான்காவது எதிரி சார்பில் மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையானார்கள்.

எதிரிகள் ஆறு பேரும் மன்றில் முன்னிலையானார்கள்.

இந்த வழக்கைப் பொறுத்தவரை, எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்ட மாற்றங்கள், உட்புகுதல்கள் என்பன தொடர்பில் மன்றின் முன் எதுவித சாட்சியங்களும் முன்வைக்கப்படாத நிலையில் அவை தொடர்பில் எந்த ஒரு நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதைத் தவிர்க்கின்றது.

முதலாவது எதிரியின் சாப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணியால் சொல்லப்பட்டதற்கு அமைய எதிரிகளுக்கு உரித்துடைய ஆவணங்கள் வழங்கப்படாதிருப்பின் அவற்றை அரச சட்டவாதி உடனடியாக வழங்கவேண்டும் என மன்று ஆணையிடுகின்றது.

அத்துடன், எதிரிகளின் தரப்பினரால் முன்வைக்கப்படும் நிலைப்பாடுகள் காரணமாக இந்த வழக்கில் தாமதம் ஏற்படுவது சுட்டிக்காட்டப்படுகின்றது. சுமார் 10 மாதங்கள் இடம்பெற்ற நடவடிக்கைகள் அனைத்தும் எதுவித அடிப்படைகளுமின்றி ஓடுகின்ற நீரில் கரைக்கப்பட்ட வாசனைப் பொருள்கள் போன்று அமைவது வருத்தத்துக்குரியது.

அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக சுமார் 2 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை உரிய வகையில் முகம் கொடுக்கவேண்டும் என்றும் தேவையற்ற தடங்கள்களை ஏற்படுத்தாது, அவர்களுக்கு எதிரான வழக்கினை விரைவாக நடவடிக்கைக்குட்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்றும் மன்று கோருகின்றது.

6 எதிரிகள் சார்பிலும் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்று செய்யப்பட்ட விண்ணப்பமானது தற்போதைக்கு நிராகரிக்கப்படுகின்றது. எதிரிகளுக்கு எதிரான விளக்கத்தை நடத்த மன்று தீர்மானிக்கின்றது – என்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் கட்டளையில் கோடிட்டுக்காட்டினார்.

## நாளை

12.12.2019 – வியாழக்கிழமை
நட்சத்திரம்: ரோகிணி மு.ப 7.36 வரை
திதி : பூரணை மு.ப 11.41 வரை
இராகுகாலம் : 1.50 – 3.20
சுப நேரம் : 7.50 – 9.20

# புலிகளின் சித்தாந்தம் இன்னும் உயிர்ப்புடன்!

## எச்சரிக்கிறார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, டிசெ. 11
விடுதலைப் புலிகளின் சித்தாந்தம் இன்னமும் உயிர்ப்புடனேயே உள்ளது என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதிய இராணுவத் தலைமையக கட்டடத்தொகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன அங்கு உரையாற்றியபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–
கடந்த ஏப்ரல் 21 தாக்குதல்கள், மிக உயர் மட்டத்தில் பொறுப்புகளில் இருந்த நபர்களின் முழுமையான அலட்சியம் மற்றும் அறியாமை தவிர வேறு ஒன்றும் இல்லை. இது இஸ்லாம் மதத்தை தவறாக வழிநடத்திய ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

இஸ்லாம், பெரும் நற்பண்புகளைக் கொண்ட ஒரு மதமாக இருப்பதுடன், ஒருபோதும் அப்பாவிப் பொது மக்களைக் கொலை செய்வதை ஆதரிக்கவில்லை. இந்தத் தாக்குதலில் காயமடைந்த பலர் இன்னும் சிகிச்சையில் உள்ளனர்.

இந்நிலையில், தேசத்தின் பாதுகாவலர்களாகிய நாங்கள் இத்தகைய வன்முறைகளை மீண்டும் செய்ய அனுமதிக்கக்கூடாது. நாடு பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டாலும், விடுதலைப் புலிகளின் சித்தாந்தம் தொடர்ந்தும் உயிர்ப்புடன் உள்ளது – என்றார். (ஐ)

# தேர்தல் தோல்விக்குக் காரணம் கண்டறிந்துவிட்டாராம் ரணில்

கொழும்பு, டிசெ. 11
பௌத்த மக்களினதும், இளைஞர்களினதும் மற்றும் மத்திய வர்க்கத்தினரினதும் வாக்குகள் கிடைக்காமையே ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைய பிரதான காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணி உறுப்பினர்களை நேற்று முன்தினம் சிறிகொத்தாவில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–
ஜனாதிபதித் தேர்தலில் எதிர்நோக்கிய சரிவை குறைமதிப்புக்கு உட்படுவது உகந்ததல்ல. எனவே அடுத்த நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஜனநாயக விரும்பிகள் உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் 113 ஆசனங்களை வெற்றி கொள்ளவதற்காகப் பணியாற்ற வேண்டும்.

கிடைத்துள்ள தேர்தல் முடிவுகளுக் கமைய அனைவருக்கும் 105 அல்லது 106 பிரதிநிதித்துவம் கிடைக்கும். பல்வேறு ஆய்வுகள் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்திருந்தன. எனவே அவை தொடர்பில் பகுப்பாய்வு செய்வது சிறந்தது.

பௌத்த மக்களினது விருப்பம், இளைஞர்களினதும் மற்றும் மத்திய வர்க்கத்தினரினதும் வாக்குகள் தொடர்பில் கவனம் எடுக்க வேண்டியது அவசியம்.

முதலாவதாக பௌத்த பிக்குகளுடன் கலந்துரையாடல்களை நடத்துவது அவசியம். மற்றையவர்கள் இளைஞர், யுவதிகளின் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுகொள்வதற்குப் பணியாற்றவேண்டியது முக்கியம்.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கட்சியில் உள்ள இளைஞர் அமைப்புக்களிடத்தில் பல திட்டங்கள் உள்ளன.

கட்சியின் இரண்டாம் நிலை தலைமைத்துவத்தை முன்கொண்டு வந்து அதனூடாக எதிர்வரும் தேர்தலைச் சந்திக்கவேண்டும். கட்சியில் காணப்படும் குறைப்பாடுகளில் இருந்து பாடம் கற்று கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களுடன் வாதம் புரிவதில் பலனில்லை – என்றார். (ஐ)

# கனமழையால் 28,764 பேர் கிளிநொச்சியில் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ. 11
கிளிநொச்சியில் கடந்த சில நாட்களில் பெய்த கனமழை காரணமாக 8959 குடும்பங்களைச் சேர்ந்த 28764 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு மரணம் பதிவாகியுள்ளது என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

6 வீடுகள் முழுமையாகவும் 137 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் அது மேலும் கூறியுள்ளது.

கரைச்சி கண்டாவளை – பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 4259 குடும்பங்களைச் சேர்ந்த 13754 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். 4 வீடுகள் முழுமையாகவும் 118 வீடுகள் பகுதியளவிலும் சேதமாகியுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 4045 குடும்பங்களைச் சேர்ந்த 13121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் முழுமையாகவும் 17 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 319 குடும்பங்களைச் சேர்ந்த 917 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 336 குடும்பங்களைச் சேர்ந்த 972 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மேலும் கூறியுள்ளது. (ஐ)

# உரும்பிராயில் வீடு மீது பெற்றோல் குண்டுவீச்சு!

யாழ்ப்பாணம், டிசெ. 11
உரும்பிராய்ப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு வீடு ஒன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை . இந்நிலையில், சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ஐ.தே.க. தலைமைச் சிக்கலை தீர்க்க 6 பேர் கொண்ட குழு!

கொழும்பு, டிசெ. 11
ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள தலைமைத்துவப் பிரச்சினைக்குப் பரிந்துரை வழங்கவும், சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் ஆறு பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இரண்டு வாரங்களுக்குள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையை வழங்கவுள்ளது.

ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அதுக்கோரள, ஆசு மாரசிங்க, வஜிர அபேவர்தன, மலிக் சமரவிக்ரம, லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரே இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். (ஐ)

# ஜனநாயக ரீதியாக போராட வேண்டும்

## திருமலை மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கம் நேற்றுக் கூடித் தீர்மானம்

திருமலை, டிசெ. 11
ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக திருகோணமலை மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்தச் சாங்கத்தின் பிரதிநிதிகள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –
கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது கடந்த மாதம் 29ஆம் திகதியுடன் 1000 நாள்களைக் கடந்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று (நேற்று) சர்வதேசத்துக்கும் நாட்டின் புதிய ஜனாதிபதிக்கும் தமது நிலைமைகளை வெளிப்படுத்துவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

எமது உறவுகளது நிலைமைகள் தொடர்பாக புதிய ஜனாதிபதியின் பொறிமுறை எவ்வாறு அமையப்போகின்றது எனும் எதிர்பார்ப்புடன் உள்ளோம்.

எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் இருக்கின்றார்களா இல்லையா? என்பதற்கான நீதியான பதிலை ஜனாதிபதி பெற்றுத்தர வேண்டும். தொடர்ச்சியாக வீதிகளில் இறங்கிப் போராடிய நாங்கள் இனிவரும் காலங்களில் ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் – என்றனர். (ஐ)



# கூட்டமைப்புடன் கைகோர்ப்பது குறித்து இன்னும் முடிவில்லை என்கிறார் மனோ

கொழும்பு, டிசெ. 11
பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து இதுவரை தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியன பொதுத் தேர்தலில் இணைந்து செயற்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன

இது தொடர்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



இந்த விடயம் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாக செய்திகள் வெளியாகிவருகின்றன எனத் தெரி வித்த மனோ, எனினும் இது குறித்து தீர்க்கமான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

# ரோயல் பார்க் படுகொலை விவகாரம்: ஜயமஹா வெளிநாடு சென்றுவிட்டார்

கொழும்பு, டிசெ. 11
ரோயல் பார்க் அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து தனது காதலியின் சகோதரியை தள்ளிவிழுத்திக் கொலை செய்த விவகாரத்தில் மரண தண்டனை அனுபவித்து அண்மையில் பொதுமன்னிப்பளிக்கப்பட்ட வந்த ஜூட் ஷ்ரமந்த ஜயமஹா வெளிநாடு சென்றுவிட்டார்.

குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நேற்று உயர்நீதிமன்றத்தில் இதனை அறிவித்தார்.

மரண தண்டனை கைதியான ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுமன்னிப்பளித்திருந்தார். அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு வந்தபோதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வரை அவருக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று வழக்கு விசாரணையின்போது, அடுத்த வருடம் ஜூன் மாதம் வரை பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# குடியுரிமைச் சட்டத் திருத்தப் பிரேரணைக்கு காலையில் எதிர்ப்பு: மாலையில் முழு ஆதரவு

## சிவசேனைக் கட்சி அடித்த அந்தர் பல்டி



மும்பை,டிசெ.11

குடியுரிமை சம்பந்தமாக இந்திய நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பில் மகாராஷ்டிரத்தில் ஆளும் சிவசேனாக் கட்சி காலையில் விமர்சனமும், மாலையில் ஆதரவும் என் அந்தர் பல்டி அடித்தது.

2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம்கள் அல்லாத சிறுபான்மையினருக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வகை செய்யும் குடியுரிமை சட்டத் திருத்தப் பிரேரணையை நேற்று முன்தினம் நாடாளுமன்ற மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ா தாக்கல் செய்தார். அது எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனத்துக்குள்ளானது.

மக்களவையில் நடைபெற்ற 9 மணி நேர காரசார விவாதத்திற்கு பிறகு, 311 உறுப்பினர்கள் ஆதரவுடன் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. குடியுரிமை திருத்தப் பிரேரணைக்கு, பா.ஜ.க., அ.தி.மு.க., அகாலி தளம், ஐக்கிய ஜனதா தளம், சிவசேனா உள்ளிட்ட கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

மராட்டிய தேர்தல் முடிவுக்கு பிறகு அதிகாரப் பகிர்வில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், பா.ஜ.கவுடனான கூட்டணியை முறித்துக்கொண்டு காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடன் கூட்டணி வைத்த சிவசேனா, குடியுரிமைச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவு அளித்தது அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

முன்னதாக, நேற்று முன்தினம் காலை சிவசேனா தனது கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான 'சாம்னா' வில் குடியுரிமைச் சட்டத் திருத்தத்தைக் கடுமையாக விமர்சித்து இருந்தது. கண்களுக்குப் புலப்படாத வகையில் இந்து . முஸ்லிம் பிரிவினைவாதத்தை முன்னெடுக்கிறது இந்தச்சட்டத் திருத்தம் என மத்திய அரசை சிவசேனா விமர்சித்து இருந்தது. ஆனால், மாலையில் மக்களவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு ஆதரவாக சிவசேனா வாக்களித்துள்ளது.

மாறுபட்ட நிலைப்பாடு குறித்து விளக்கம் அளித்த சிவசேனா எம்.பி. அரவிந்த் சாவந்த், நாட்டு நலன் கருதியே குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு நாங்கள் ஆதரவு அளித்தோம். குறைந்தபட்ச பொது செயல் திட்டம் மராட்டியத்துக்கு மட்டுமே பொருந்தும் என்றார். சிவசேனாவின் இந்த நிலைப்பாடு மராட்டியத்தில், சிவசேனா அரசுக்கு ஆதரவு அளித்துள்ள காங்கிரஸ் கட்சிக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சென்ன. வீதிகளில் கேட்பாரற்றுக் கிடந்த 3,000 வாகனங்கள் ஏலத்தில் விற்பனை!



சென்னை,டிசெ.11

சென்னை சாலைகளில் கேட்பாரற்று நின்ற கார், மோட்டார் சைக்கிள் உள்பட 11 ஆயிரம் வாகனங்கள் மாநகராட்சி சார்பில் ரூ.3 கோடிக்கு ஏலம் விடப்பட்டுள்ளன.

சென்னை மாநகர சாலையோரங்களில் நீண்ட நாள்களாகப் பழுதடைந்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த கேட்பாரற்ற வாகனங்கள் மாநகராட்சி சார்பில பொலிஸ் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன.

நடைபாதையோரங்களில் இருந்த மோட்டார்சைக்கிள் ஆட்டோகள், கார், வான் உள்ளிட்ட 10 ஆயிரத்து 954 வாகனங்கள் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் குவித்து வைக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன.

அனைத்து வாகனங்களும் ரூ.3 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. இதில் 75 சதவீதம் தொகை சென்னை மாநகர பொலிஸ் துறைக்கு சி.சி.ரி.வி. கமராக்கள் வாங்க செலவிட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதல் கட்டமாக 3,079 வாகனங்கள் ஏலம் விடப்பட்டதில் கிடைத்த ரூ.91.11 லட்சம் தொகையில் 75 சதவீதம் ரூ.68.33 லட்சத்துக்கான காசோலையை சென்னை பொலிஸ் கொமினர் ஏ.கே.விஸ்வநாதனிடம் மாநகராட்சி கமினர் பிரகாஷ் நேற்றுமுன்தினம் வழங்கினார்.

# திருவண்ணாமலையின் உச்சியில் நேற்று ஏற்றப்பட்டது மகாதீபம்!





திருவண்ணாமலையில் நேற்றுக் காலை பரணி தீபமும் மாலையில் மகாதீபமும் ஏற்றப்பட்டன. இதற்காக 25 லட்சம் பக்தர்கள் அங்கு குவிந்திருந்தனர்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தீப விழாவின் உச்சகட்டமாக, 10 ஆவது நாளான நேற்று மாலை 2,668 அடி உயர அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது.

மகா தீபத்தையொட்டி நேற்று அதிகாலை 2 மணிக்கு கோவில் நடைதிறக்கப்பட்டு பஞ்ச மூர்த்திகளுக்கு சிறப்பு அபிகேம், தீபாராதனை செய்யப்பட்டது. அதிகாலை 4 மணிக்கு கோவில் மூலவர் சன்னதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் பரணி தீபம் ஏற்றப்பட்டது.

அர்த்த மண்டபத்தில் யாகம் வளர்த்து அதிலிருந்து பரணி தீபத்தை சிவாச்சாரியார்கள் ஏற்றினர். பரணி தீபம் சன்னதியில் இருந்து கொண்டு செல்லப்பட்டு வைகுண்ட வாசல் வழியாக மகா தீப மலைக்கு காட்டப்பட்டது. பக்தர்கள் தரிசனத்துக்கும் பரணி தீபம் கொண்டு செல்லப்பட்டது. பக்தர்கள் 'அண்ணாமலையாருக்கு அரோகரா' என்று பக்தி கோம் முழங்கி தீபத்தை தரிசித்தனர்.

பிறகு, பஞ்ச பூதங்களை குறிக்கும் வகையில் பரணி தீபம் மூலம் 5 விளக்குகளில் தீபம் ஏற்றப்பட்டது. ஒவ்வொரு சன்னதியாக கொண்டு செல்லப்பட்டு அங்கு தீபம் ஏற்றப்பட்டது. அதிகாலை 3 மணி முதல் பகல் 11 மணி வரை கோவிலுக்குள் வந்த பக்தர்கள் பரணி தீபத்தை தரிசனம் செய்தனர்.

கிளிகோபுரம் உட்புறம், மூலவர், அம்மன் சன்னதிகளில் பக்தர்கள் வரிசையாக நின்று தரிசனம் செய்தனர்.

புரவி மண்டபத்தில் இருந்து கிளிகோபுரம் வரை இரும்பு தடுப்புகளும் அமைக்கப்பட்டன. நிகழ்ச்சியில் அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் கலெக்டர் கந்தசாமி மற்றும் பிரமுகர்கள், லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று பரணி தீபத்தைத் தரிசனம் செய்தனர்.

மாலை 6 மணிக்கு கோவில் பின்புறம் உள்ள 2,668 அடி உயரமுள்ள அண்ணாமலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது. முன்னதாக அர்த்த நாரீஸ்வரர் தனி வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்குக் காட்சி தந்தார்.

அப்போது கோவில் கொடி மரம் எதிரேயுள்ள அகண்டத்திலும் தீபம் ஏற்றப்பட்டது. மலை உச்சியில் ஏற்றப்பட்ட மகா தீபம் தொடர்ந்து 11 நாள்கள் எரியும். 40 கிலோமீற்றர் தூரத்தில் இருந்தும் மகா தீப ஜோதி தரிசனத்தைப் பார்க்க முடியும்.

பௌர்ணமி இன்று காலை 11.10 மணிக்கு தொடங்கி நாளை காலை 11.05 மணி வரை இருக்கிறது. இதனால் பக்தர்கள் 2 நாள்கள் கிரிவலம் செல்வார்கள்.

வேலூர், சென்னை, விழுப்புரம், காஞ்சீபுரம், திருச்சி, சேலம் உள்படதமிழகம் முழுவதும் இருந்தும், அண்டை மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 25 லட்சம் பக்தர்கள் திருவண்ணாமலையில் குவிந்துள்ளனர். இதனால் பக்தர்கள் வெள்ளத்தில் திருவண்ணாமலை தத்தளிக்கிறது.



பக்தர்களின் வசதிக்காக சிறப்பு பஸ்கள், சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதற்காக, 15 தற்காலிக பஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 8,500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆளில்லா குட்டி விமானம் மூலமும் தீவிரமாகக் கண்காணிப்பு பணி நடக்கிறது.

கிரிவலப்பாதை கோவிலுக்குள்ளும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. மகா தீபம் ஏற்றப்படும் வரை திருவண்ணாமலை நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் வீடுகளில் யாரும் மின் விளக்குகளை ஏற்றவில்லை. மகா தீபம் ஏற்றப்பட்ட பிறகே, அனைவரும் மின்விளக்குகளை போட்டனர். அப்போது திருவண்ணாமலை நகரமே ஒளி வெள்ளத்தில் மூழ்கியது.

# நியூஸிலாந்து எரிமலை வெடிப்பை பார்க்கச் சென்ற ஐவர் உயிரிழப்பு!





## 28 பேர் காயம்; 20 பேருக்கு மேல் மாயம்

நியூஸிலாந்து நாட்டில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் 5 பேர் உயிரிழந்தனர்.

வகாடனே நகரில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் வெள்ளைத் தீவு உள்ளது. இந்த தீவில் உள்ள வாகாரி என்ற எரிமலை தற்போது வெடித்து புகையை வெளியிட்டு வருகிறது.

இந்நிலையில் எரிமலையைப் பார்வையிடுவதற்காக நூறுக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் சென்றனர். அப்போது எரிமலை வெடிப்பின் போது ஏற்பட்ட பாறைச் சிதறல்கள் விழுந்ததில் 5 பேர் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது.

மேலும் 18 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், இரு பதுக்கும் மேற்பட்டவர்கள் காணாமற் போயுள்ளனர் என வும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

வாகாரி எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால் அங்கு சுற்றுலா பயணிகளை மீட்பதில் சிரமம் ஏற்பட்டுள் ளதாக நியூஸிலாந்து அரசு தெரிவித்துள்ளது.





# 'மிஸ் யூனிவர்ஸ்' பட்டம் தென்னாபிரிக்க அழகிக்கு






அட்லாண்டா,டிசெ.11

அமெரிக்காவின் ஜோர்ஜியாமாகாணம்அட்லாண்டா நகரில் 2019 ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகி போட்டியில் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மொடல் அழகி சோசிபினி துன்சி என்பவர் பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தப் பிரபஞ்ச அழகிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மொடல் அழகி வர்திகா சிங் உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 90 அழகிகள் கலந்து கொண்டனர்.

இவர்களில் தென்னாபிரிக்கா, மெக்ஸிக்கோ, கொலம்பியோ, பியூர்டோ ரிகோ மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 5 அழகிகள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

இறுதியில் தென்னாபிரிக்காவை சேர்ந்த 26 வயதான மொடல் அழகி சோசிபினி துன்சி என்பவர் பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு கடந்த ஆண்டு பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்ட பிலிப்பைன்சை சேர்ந்த கேட்ரியோனா கிரே மகுடம் சூட்டினார்.

2 ஆவது இடத்தை பியூர்டோ ரிகோவின் மேடிசன் ஆண்டர்சன் பிடித்தார். மெக்ஸிக்கோவைச் சேர்ந்த சோபியா 3ஆவது இடம் பிடித்தார். இந்தியாவின் சார்பில் பங்கேற்ற வர்திகா சிங், முதல் 10 இடங்களுக்குள் வரவில்லை.

பிரபஞ்ச அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட 26 வயதான சோசிபினி டன்சி பாலினக் குற்றங்களுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப்பவர். அதேபோல், என்னதான் அழகியாக இருந்தாலும் இயற்கை அழகை மட்டுமே நம்பும் பெண். இதுபோன்ற காரணங்களே அவரின் இந்த வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளன.

மிஸ் யூனிவர்ஸ் 2019 என்ற அறிவிப்பிற்கு முன்னர் சோசிபினி டன்சிக்கு புகழாரம் சூட்டிய போது, சமூக வலைதளங்களில் தான் செய்த பிரசாரங்களின் மூலம் பாலின பேதத்தை உடைத்துக் கொண்டிருப்பவர். பெண்களிடையே இயற்கை அழகை ஊக்குவித்தவர் என்று கூறியே அவரை அழைத்தது.

போட்டியில் இறுதிக் கேள்வியாக இன்றைய இளம் தலைமுறைப் பெண்களுக்கு என்ன கற்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. அவரவர் தங்களுடைய கருத்தைப் பதிவு செய்த நிலையில் சோசிபினி டன்சி அளித்த பதில்தான் விருந்தினர்களை கவர்ந்தது. அதாவது, அவர் பெண்களுக்குத் தலைமை பண்பை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அது, அவையோரைக் கவனம் பெறச் செய்ததாலேயே அவருக்கு மிஸ் யூனிவர்ஸ் 2019 பட்டம் கிடைத்துள்ளது.

# உலகின் மிக இளம் வயதுப் பிரதமர் பின்லாந்துத் தலைவர் சன்னா மரின்



ஹெல்சின்கி,டிசெ.11

பின்லாந்து நாட்டை சேர்ந்த பெண் ஒருவர் உலகின் மிக இளம் வயது பிரதமர் ஆனார்.

பின்லாந்து நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சமூக ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்று நான்கு கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தது. அக்கட்சியைச் சேர்ந்த அண்டி ரின்னே, பிரதமராகப் பதவியேற்றார்.

இந்நிலையில் பின்லாந்தில் இரண்டு வாரங்களாக நடைபெற்ற தபால் துறை வேலைநிறுத்த விவகாரத்தை, பிரதமர் அண்டி ரின்னெ சரியாகக் கையாளவில்லை என்று குற்றம்சாட்டி அவருக்கு அளித்த ஆதரவை கூட்டணிக் கட்சிகள் விலக்கிக் கொண்டன. இதனால் அண்டி ரின்னே கடந்த 3 ஆம் திகதி பதவி விலகினார்.

இதனைத் தொடர்ந்து சமூக ஜனநாயகக் கட்சியின் பிரதமர் வேட்பாளருக்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் அதிக வாக்குகள் பெற்ற சன்னா மரின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போக்குவரத்துத்துறை அமைச்சராக செயல்பட்டுவந்த 34 வயதான சன்னா மரின், பின்லாந்து நாட்டின் பிரதமராகப் பதிவேற்றதன் மூலம் உலகில் ஆட்சியில் இருக்கும் மிக இளம் வயது பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

சன்னா மரின் தனது 27 ஆவது வயதில் அவரது சொந்த ஊரான டம்பியரில் நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த 2015ம் ஆண்டு பின்லாந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், கடந்த ஜூன் மாதம் போக்குவரத்துத்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

இது குறித்துப் பேசிய சன்னா மரின், நான் எனது வயதை ஒரு பொருட்டாக கருதியதில்லை. மக்களுக்கு என் மீது நம்பிக்கை ஏற்படுவதற்கான வழி குறித்து மட்டுமே சிந்திக்கிறேன். மேலும் நாம் செய்ய வேண்டிய பணிகள் இன்னும் நிறைய இருக்கின்றன என்று கூறினார்.

# அண்டார்ட்டிக்காவில் சிலி நாட்டு விமானம் 38 பேருடன் திடீரெனக் காணாமல் போனது

## விழுந்து நொறுங்கியிருக்கலாம் என அச்சம்

சாண்டிகோ,டிசெ.11

சிலி நாட்டில் மாயமான இராணுவ விமானம் விழுந்து விபத்துக்குள்ளாகியிருக்கக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியின் தெற்கு பகுதியில் இருந்து அண்டார்டிக்காவில் உள்ள விமானப்படை தளத்திற்கு அந்நாட்டின் இராணுவத்தைச் சேர்ந்த ஏசி – 130 ஹெர்குலஸ் ரக விமானம் புறப்பட்டுச் சென்றது.

உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 4.55 மணியளவில் புறப்பட்டுச்சென்ற அந்த விமானம், சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. விமானத்தில் மொத்தம் 38 பேர் பயணித்துள்ளனர்.

மாயமான விமானத்தை தேடும் பணியில் சிலி நாட்டின் விமானப்படை ஈடுபட்டு வரும் நிலையில், அந்த விமானம் விபத்துள்ளாகியிருக்கக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிலி விமானப்படை தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில், விமானத்துடனான தொடர்பை இழந்து பல மணி நேரம் ஆன நிலையில் அது விபத்தில் சிக்கி இருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது என பதிவிட்டுள்ளது.

இது குறித்து சிலி அதிபர் செபாஸ்டியன் பினேரா, தான் விமானப்படை தலைமையகத்தில் இருந்து நிலைமையை கண்காணித்து வருகிறார் எனவும், தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனவும் தெரிவித்தார்.



17 சிப்பந்திகள் 21 பயணிகள் என மொத்தம் 38 பேருடன் இந்த இராணுவ விமானம் மாயமானது. அவர்களில் மூவர் சாதாரண சிவிலியன்கள்.

அண்டார்டிக்காவில் மிதக்கும் எரிபொருள் விநியோக நிலையங்களில் கண்காணிப்புக்குச் சென்ற குழுவே இவ்வாறு அனர்த்தத்தைச் சந்தித்துள்ளது.

இன்று டிசெம்பர் 11ஆம் திகதி மகாகவி பாரதியின் 137 ஆவது பிறந்த தினம். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

## படித்தோம் சொல்கின்றோம்:

# சித்திரபாரதியும் கருத்துப்படங்களும்

தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரம் கிராமத்தில் இன்றைய தினம் (டிசெம்பர் 11ஆம் திகதி) ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பெற்றவர்கள் அக்குழந்தைக்கு சூட்டிய பெயர் சுப்பிரமணியன். செல்லமாக சுப்பையா என அழைத்தார்கள்.

அந்தக் குழந்தை பாரதியாக வளர்ந்து மகாகவியாகி 1921 செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி அதிகாலை தனது உயிரை நீத்தது. மறையும் போது 39 வயதுதான்.

மேதாவிலாசம்மிக்க பலருக்கு அற்பாயுள் தான்! அத்தகைய அபூர்வ மனிதர் பாரதியார் குறித்து இன்றும் பேசப்படுவதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன.

அந்தக் காரணங்களை ஆராயப்புகும் போது, உலகின் உயர் விருது எனக் கருதப்படும் நோபல் விருது அவருக்கேன் வழங்கப்படவில்லை.. என்ற ஆதங்கமே எமக்குமே லோங்குகிறது.

வறுமையில் வாடிய போதும்வீழ்வேன் என நினைத்தாயோ..? என்று வீம்போடு பேசியவர் பாரதியார். விருதுகள், பட்டங்களைத் தேடி ஓடாதவர். பாரதி பட்டம் கூட அவரது பால்ய காலத்து கவியாற்றலுக்காகத்தான் வழங்கப்பட்டது. அதுவே இறுதி வரையிலும் நிலைத்து நிற்கிறது.

பாரதி மறைந்து, இறுதி ஊர்வலத்தில் அவரது பூதவுடல் நகர்ந்த போது உடன் வந்தவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த எண்ணிக்கை கூட பதினைந்தை தாண்டாது!

அவர் தனது முப்பத்தொன்பது ஆண்டு கால




வாழ்க்கையில் பதினேழு ஆண்டு காலத்தை பொது வாழ்க்கைக்கு அர்ப்பணித்தவர் என்று பாரதி இயல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அந்தப் பொது வாழ்வில்தான் அவர் கவிஞரகவும் அதே சமயம் பத்திரிகையாளராக, மொழிபெயர்ப்பாளராக, பாடசாலை ஆசிரியராக, அரசியல் மாநாடுகளில் பங்கேற்றவராக, பிரிட்டிஷாரின் அடக்கு முறையிலிருந்து தப்பி புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தவராக – இறுதியில் சிறைவாசம் அனுபவித்தவராக அலைந்துழன்றிருக்கிறார்.

எனினும் அவருடைய அசாத்திய துணிவும் தர்மா வேசமும் எச்சந்தர்ப்பத்திலும் குறைந்து விடவில்லை. அத்துடன் கேலியும் கிண்டலும் அங்கதமும் இழையோடப் பேச வல்லவர்.

தன்னைக் கவர்ந்து செல்லவரும் காலனையும்



எட்டி உதைப்பேன் என்று ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பியவர். மகாத்மாகாந்தி சென்னைக்கு வந்த வேளையில், அவர் இருந்த இல்லத்திற்கு அத்துமீறிப் பிரவேசித்து, தான் திருவல்லிக் கேணி கடற்கரையில் ஒழுங்கு செய்திருக்கும் பொதுக் கூட்டத்திற்கு வர முடியுமா...? எனக் கேட்டவர்.

காந்தியோ தனக்கிருந்த வேறு வேலைகளினால் வரமுடியவில்லை எனச் சொன்னதும் 'வாழ்க நீ எம்மான்....' எனப் பாடி விட்டு விருட்டென விரைந்து மறைந்தவர்.

இத்தகைய துடிப்பான இயல்பு கொண்டிருந்த பாரதி, ரவீந்திரநாத் தாகூருடன் கருத்தியில் ரீதியில் கவிதா வாதம் நடத்துவதற்கு விரும்பியவர். இது பற்றி பேராசிரியர் க. கைலாசபதி தனது இரு




மகாகவிகள் நூலில் பதிவு செய்துள்ளார்.

பாரதியின் சரிதையைத் தமிழில் எழுதியிருக்கும் சுத்தானந்த பாரதியாரும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் பேராசிரியர் பி. மகாதேவனும் பாரதியார், ரவீந்திரநாத் தாகூருடன் கவிதா விவாதம் நடத்த விரும்பினார் என்ற தகவலை தமது நூல்களில் விவரித்துள்ளனர்.

ஒரு நாடக பாணியில் இது நிகழ்ந்திருக்கிறது. ஆனால், அந்தக் காட்சியில் தாகூர் இல்லை.

**பாரதி:** அப்பா, இப்போது தாகூர் எங்கிருக்கிறான்...?

**சிஷ்யன்:** மதுரையில்.

**பாரதி:** உடனே புறப்படு. சலோ மதுரை. அவனை ஒரு கைபார்க்கிறேன்.

**சிஷ்யன்:** நாம் போவதற்குள் தாகூர் சென்று விட்டால்...?

**பாரதி** :அட அபசகுனமே...! நமது தமிழ் நாட்டுக்குத் தாகூர் வந்து நம்மைக் காணாமல் செல்லுவதா...?

**சிஷ்யன்:**விலாசம்தெரியாதே...!

**பாரதி:** அட..சீ...! தாகூர், மதுரை தந்தி பறக்கும் ஐயா...!

**சிஷ்யன்:** சரி... என்ன செய்தி அறிவிக்க...?

**பாரதி:** தமிழ் நாட்டுக் கவியரசர் பாரதி, உம்மைக் கண்டு பேச வருகிறார் என்று உடனே தந்தி அடியும்.

**சிஷ்யன்:** அங்கே போய் என்ன செய்யப் போகிறீர்...?

**பாரதி:** ஓய்... ஓய்..., நாம் தாகூருக்கு ஒன்று சொல்லுவோம். நீர் வங்கக் கவி. நாம் தமிழ்க்கவி. விக்டோரியா ஹாலில் கூட்டம் கூட்டுவோம். உமது நோபல் பரிசைச் சபை முன்வையும். நாமும் பாடுவோம். நீரும் பாடும். சபையோர் யார் பாட்டுக்கு 'அப்ளாஸ்' கொடுக்கிறார்கள் என்று பார்ப்போம். நமது பாட்டே நயம் என்று சபையோர் மெச்சுவார்கள். உடனே உமது கையால் எமக்கு நோபல் வெகுமதியைத் தந்து செல்ல வேண்டியது என்போம்..!

**சிஷ்யன்:** அதெப்படி...? அவர் வங்காளத்தில் பாடுவார். நீர் தமிழில் பாடுவீர். வங்காளத்திற்குக் கிடைத்த நோபல் பரிசு உமது தமிழுக்கு எப்படிக் கிடைக்கும்...?

**பாரதி:** அட..அட அப ஜெயமே! சர்வவேசுரன் தமிழனுக்கு எல்லாம் வைத்தான். புத்தி மட்டும் வைக்கவில்லை. நேற்றுப் பிறந்த வங்காளத்தான் நோபல் பரிசு வாங்க வேண்டும். கற்ப கோடி காலம் வாழ்ந்த தாழ்ந்த தமிழன் அந்தப் பரிசுக்கு லாயக்கில்லையோ...?

**சிஷ்யன்:** மன்னிக்க வேண்டும். தமிழ் வங்கத்திற்கு தாழ்ந்ததில்லை. ஆனாலும் அவர் உலக மகாகவியாகப் புகழ் பெற்றவர்.

**பாரதி:** நாம் உலகப் புகழ் பெற முடியாதோ...? அட தரித்திர மனிதா! அந்த இழவுக்குத் தான் நோபல் வெகுமதியைத் தாகூரிடமிருந்து வெல்ல வேண்டும் என்கின்றோம் !

இந்த மாதிரியே பேசிக்கொண்டு பாரதியார் இரவில் எட்டய புரம் வந்தார். (1919) பிறகு நன்றாகச் சாப்பிட்டுத் தலையைச் சாய்த்தார். மறுநாள் காலையில்தான் எழுந்தார். நோபல் வெகுமதி வியம் மறந்துபோயிற்று.

– இது யோகி சுத்தானந்த பாரதி தீட்டியுள்ள சித்திரம். 1918 இல் பாரதியார் புதுச்சேரி வாழ்க்கை அலுத்துப் போய் தமது மனைவியின் ஊரான கடயத்திற்குச் சென்றார். கடயத்தில் ஈராண்டு வாழ்க்கை. அப்பொழுது தான் மேற்கூறிய சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிகிறது என்று எழுதுகிறார் பேராசிரியர் கைலாசபதி.

பாரதியார் (1882 – 1921). ரவீந்திரநாத் தாகூர் (1861 – 1941)


இவர்கள் இருவரையும் ஒப்பீடு செய்து கைலாசபதி (இரு மகாகவிகள்) தொ.மு. சி. ரகுநாதன் (கங்கையும் காவிரியும்) உட்பட பலர் ஆய்வு செய்துள்ளனர்.

பாரதியாரும் தாகூரைப் போன்று நோபல் விருதுக்கு முற்றிலும் தகுதியானவர்தான் என்பதை பறை சாற்றும் இரண்டு தொகுப்புகள் பற்றி இங்கே அறிமுகம் செய்ய விரும்புகின்றேன்.

பாரதி என்ற பெயரிலேயே இலங்கையில், ஓர் இலக்கியச் சிற்றிதழை நடத்தியவரும், பலமேனாட்டு கவிதை இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்தவருமான மூத்த எழுத்தாளர் கே. கணேஷ் அவர்கள், மறைவதற்குச் சில வருடங்களுக்கு முன்னர், இனி இது உங்களிடம்தான் இருக்க வேண்டும் எனச் சொல்லி என் வசம் தந்த இரண்டு அரிய பொக்கிங்கள்தான் அவை!

ரா. அ. பத்மநாபன் தொகுத்திருக்கும் சித்திர பாரதி, ஆ. இரா. வேங்கடாசலபதி தொகுத்திருக்கும் பாரதியின் கருத்துப் படங்கள் – ஆகிய குறிப்பிட்ட இரண்டு பெறுமதி வாய்ந்த நூல்களும் மகாகவி பாரதியின் பேராளுமையை பல்வேறு ஆதாரங்களுடனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரிய ஒளிப்படங்களுடனும் சித்திரிக்கின்றன

### சித்திர பாரதி




பாரதி நூற்றாண்டை முன்னிட்டு வெளியான சித்திரபாரதி என்னும் தொகுப்பில், பாரதியின் கையெழுத்துப் பிரதிகள், கடிதங்கள், பாரதி ஆசிரியராக பணியாற்றிய பால பாரதா (ஆங்கிலம் ), சக்கரவர்த்தினி, கர்மயோகி, விஜயா, இந்தியா முதலானவற்றின் படங்கள், பாரதியார் சம்பந்தப்பட்ட பல அரிய ஒளிப்படங்கள், அவருடன் நெருக்கமாக இருந்த சுதந்திரப் போராட்ட தியாகிகள் பற்றிய விவரங்கள் என்பன இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பாரதியின் மனைவி செல்லம்மா மற்றும் பாரதி மிகவும் மதித்த விவேகானந்தரின் சீடர் நிவேதித்தா, வீட்டுப் பணியாள் அம்மாக் கண்ணு, வ. உ.சிதம்பரப்பிள்ளை, வ.வே.சு. அய்யர், குவளைக் கண்ணன், சுதந்திரப் பேராட்ட வீரர் வாஞ்சி நாதன் உட்பட பலரதும் ஒளிப்படங்கள் இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகளுக்குப் பக்கத்தில் பொருத்தமான பகுதிகளில் இணைக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் பதிப்பு பாரதியின் 76 ஆவது பிறநததினம் கொண்டாடப்பட்ட காலத்தில் 1957 இல் வெளிவந்துள்ளது. மண்டயம் ஸ்ரீஸ்ரீநிவாஸாச்சாரியார் அதற்கு முகவுரை எழுதியுள்ளார். அதன்



திருத்திய இரண்டாம் பதிப்பினையே கே.கணேஷ் அவர்கள் என்னிடத்தில் கையளித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ரணில் தலைமையிலேயே ஐ.தே.க. பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும்!

## அடித்துக் கூறுகின்றார் அகிலவிராஜ்

கொழும்பு, டிசெ. 11

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழேயே போட்டியிடும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் கட்சியின் தலைமைத்துவத்திலும் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை மாற்றுவதில் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியாக உள்ளனர் எனபது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சுவிஸ் தூதரகப் பெண் ஊழியர் கடத்தல் ஐ.தே.க.வின் நாடகம்!

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

சுவிஸ் தூதரகக் கடத்தல் சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சியின் கற்பனை நாடகம். மேற்குலக நாடுகளுடன் புதிய ஜனாதிபதி இராஜதந்திர உறவுகளை மேம்படுத்திக் கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கும் நோக்கத்திலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் இந்தியாவுக்கான முதலாவது அதிகாரபூர்வ விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. அதே நேரம் வல்லரசுகளிடையே அல்லது அரசியல் அதிகார சக்திகளுக்கிடையே இடம்பெறும் மோதல்களில் இலங்கை சிக்கிக்கொள்ளாது என்று வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தார். இந்த நிலையில் சுவிஸ் தூதரகத்தின் கடத்தல் விவகாரம் நன்மை தரும் வகையில் உருவாகிவரும் ராஜதந்திர உறவுகளை சீரழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கற்பனை நாடகம்.



ஜனாதிபதி கோட்டாபய அவருக்கு கிடைத்த வெற்றி ஆணையை முழுமையாக மக்களுக்குப் பயன்தரும் வகையிலேயே பயன்படுத்துகிறார்.

அதன் முதலாவது விடயம் அமைச்சரவையை 15ஆக குறைத்தமை. அதனையடுத்து அவரது வாகன அணியை 5 ஆக குறைத்தமை, வெளிநாட்டுப் பயணங்களின்போது முக்கிய பிரமுகர்களின் ஓய்விடத்தைப் பாவிக்காமல்விட்டமை ஆகியனவாகும்.

அதற்கு மேலாக ஜனாதிபதியின் சூழல் மாசை குறைக்கும் நோக்கம் இப்போது இளைஞர்களால் முன்னெடுக்கப்படுகிறது. அத்துடன் நாடு இப்போது புதிய யுகத்தை நோக்கிப் பயணிக்கிறது –என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்த அங்கு உரையாற்றுகையில், முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ எதிர்க் கட்சித் தலைவராக செயற்பட முடியாதுள்ளது. இதனால் நாடாளுமன்றத்தில் பலமான எதிர்க் கட்சியொன்று இல்லாதுபோகும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முன்னர் சஜித் பிரேமதாஸவுக்கு அம்பாந்தோட்டை தொகுதியை வெற்றி பெறுமாறு அழைப்பு விடுக்கிறோம் – என்றார்.

# மனிதவள மேம்பாட்டில் இலங்கை 71 ஆம் இடம்!

கொழும்பு, டிசெ. 11

ஐ.நா. மனிதவள மேம்பாட்டு குறியீட்டுத் தரவரிசையில், இலங்கை 71ஆவது இடத்தைப் பெற்று முன்னேற்றம் கண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு (UNDP) ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளில் ஆய்வு செய்து மனித வள மேம்பாட்டின் குறியீடு பற்றி தரவரிசை அட்டவணை வெளியிட்டு வருகிறது.

ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்நாள், ஆரோக்கியமான வாழ்வு, அனைத்துத் தகவல்களும் எளிதாகக் கிடைப்பது, வசதிகள் உட்பட பல்வேறு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு உலகளவில் நாடுகள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான மனிதவள மேம்பாட்டுத் தரவரிசை அட்டவணையை ஐ.நா. வெளியிட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் மனிதவள மேம்பாட்டின் ஏற்றத்தாழ்வு என்ற அறிக்கை தொடர்பான ஆய்வை ஐ.நா மேற்கொண்டது. அதன்படி, இலங்கை 71ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அதேபோல், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளும், மனித வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இணைந்துள்ளன.

தெற்காசியாவில், மனிதர்களின் ஆயுட்காலம் மற்றும் பள்ளிப்படிப்பின் ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை இலங்கை கண்டுள்ளது.

ஐ.நா. மனிதவள மேம்பாட்டு தரவரிசை அறிக்கையின்படி, வறுமை நிகழ்வுகள், நாடுகளுக்கு நாடு பெரிதும் வேறுபடுகின்றன. பல்வேறு வகையான ஏழைகள் உலக அளவில் 130 கோடிப் பேர் உள்ளனர். அதில், 66 கோடி ஏழைகள் ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் உள்ளனர். தெற்காசியாவில் மட்டும் மொத்த ஏழைகளின் எண்ணிக்கையில் 41 சதவீதத்துக்கும் அதிகமானோர் உள்ளனர்.

இந்தியாவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தபோதிலும், உலக ஏழைகளில், 28 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது. இந்தியாவின் ஏழ்மை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பாதிக்கின்றன. அத்துடன் தொழில்நுட்பம், கல்வி மற்றும் காலநிலை நெருக்கடியை அடுத்த தலைமுறையினர் சந்திப்பார்கள் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# தேசப்பிரியவின் பதவி விலகல் கடிதத்தை நிராகரித்த கோட்டா

கொழும்பு, டிசெ. 11

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பதவி விலகும் கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தனது பதவி விலகல் கடிதத்தை இந்த மாத முற்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்தமையுடன் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும் கடிதம் அனுப்பினார்.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின்தலைவர்மஹிந்த தேசப்பிரிய பதவி விலகும் கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களிலும், அண்மையில் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் பங்களிப்பு பெரியளவில் அளவில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொழும்புக் கம்பன் கழக ஏற்பாட்டில் 'நிருத்தோற்சவம்' ஆடல்வேள்வி நிகழ்வு

கொழும்பு,டிசெ.11

கொழும்புக்கம்பன்கழகம்ஆண்டு தோறும் நடத்தும் நாட்டிய விழாவான 'நிருத்தோற்சவம் – 2019' எனும் பெயரிலான ஆடல்வேள்வி இம்மாதம் 27,28,29 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்தஆடல்வேள்வியில்கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயமும் ஈழத்தின் பிரபலமான நடன நிறுவனங்களான தியாகராஜ கலைக் கோயில் நடனப்பள்ளி, நர்த்தன நிர்ணயா நாட்டியப் பள்ளி, அபிநயஷேத்ரா நடனப்பள்ளி, பொன்னாலை சந்திர பரத கலாலயம், நாட்டிய கலாகேந்திரா ஆகியவையும் கலந்துகொள்கின்றன.

இவ்விழாவின் நடன நிகழ்ச்சிகளை நம்நாட்டின் பிரபல நடன ஆசிரியர்களான ஸ்ரீமதி ஷாலினி வாகீசன், திருமதிதிவ்யாசுஜேன்,திருமதிஸ்ரீதேவி கண்ணதாசன், திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, திருமதி பவானி குகப்பிரியா, திருமதி தயானந்தி விமலச்சந்திரன் ஆகியோர் வழங்கிச் சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழா நிகழ்வுகள் கட்டணங்கள் ஏதுமின்றி நடைபெறும் என கொழும்புக்கம்பன் கழகம் அறிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikathir



# துடுப்பாட்ட வீரர்களின் தலைக் கவசங்களை பதம் பார்த்த பந்துகள்!



ஆஸ்திரேலியாவில் நடைபெறும் உள்ளூர் முதல்தர கிரிக்கெட் தொடரான மார்ஷ் ஷெஃப்பீல்ட் ஷீல்ட் டெஸ்ட் போட்டியொன்றில் ஷான் மார்ஷ் மற்றும் ஸ்டாய்னிஸ் ஆகியோரின் தலைக்கவசங்களை பவுன்சர் பந்துகள் கடுமையாகத் தாக்கியமையால் போட்டி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா – விக்டோரியா அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

நான்கு நாள்கள் கொண்ட இந்தப் போட்டியில் விக்டோரியா அணி நாணய சுழற்சியில் வென்று பந்து வீச்சைத் தெரிவு செய்தது. அதன்படி வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடுவதற்காக களமிறங்கியது.

டிராப் – இன் ஆடுகளத்தில் (drop - in wicket) எதிர்பாராத விதமாக பவுன்சர் பந்துகள் அதிக அளவில் வெளிப்பட்டன. பனிப்பொழிவின் தாக்கத்தால் பந்து வெடிப்பான இடத்தில் ஆடுகளத்தை தொடும் போது எதிர்பாராத விதமாக பவுன்சர் ஆகியது.

இதனால் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பந்துகளை எதிர்கொள்ளத் தயங்கினர். விக்டோரியாவின் வேகப்பந்து வீச்சாளர் பீட்டர் சிடில் வீசிய பந்து ஷான் மார்ஷ் மற்றும் ஸ்டாய்னிஸ் ஆகியோரின் ஹெல்மேட்டை பதம் பார்த்தது.

இருவருக்கும் மூளையலர்ச்சி (concussion) பரிசோதனை நடத்தப்பட்டது. ஆனால் இருவரும் தெளிவாக இருக்கின்றனர் எனத் தெரியவந்தது. ஆனால் முதல் நாளில் வீரர்கள் விளையாட மறுத்தமையால் முதல்நாள் ஆட்டம் 39.4 ஓவருடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதன்பின் பராமரிப்பாளர்கள் பந்து பவுன்ஸ் ஆகாத வகையில் ஆடுகளத்தை சரிசெய்ய முயற்சி மேற்கொண்டனர். நேற்றுமுன்தினம் 2ஆவது நாள் ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக நடுவர்கள் ஆடுகளத்தை ஆராய்ந்தனர்.

ஆனால், ஆடுகளம் விளையாடுவதற்கு உகந்ததாக இல்லை என போட்டியை ரத்துச் செய்தனர். சில ஆண்டுகளாகவே மெல்போர்ன் ஆடுகளம் தனது தனித்தன்மையை இழந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது ஐ.சி.சி தரத்திற்கு ஏற்றவாறு ஆடுகளம் இல்லை என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# முக்கிய சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ரஷ்யாவுக்கு நான்கு ஆண்டுகள் தடை

முக்கிய சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ரஷ்யா கலந்து கொள்ளவதற்கு 4 ஆண்டுகள் தடை விதித்து உலக ஊக்க மருந்து எதிர்ப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டி மற்றும் கட்டாரில் 2022 ஆம் ஆண்டு நடைபெறும் உதைபந்து உலகக் கிண்ணப் போட்டியிலும் ரஷ்யாவின் கொடி அணிவகுப்பில் இடம்பெறாது. அந்நாட்டின் தேசிய கீதமும் ஒலிக்காது.

சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற உலக ஊக்க மருத்து எதிர்ப்பு அமைப்பின் கூட்டத்தில் ஒருமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று நேற்று முன் தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

போலியான ஆதாரங்கள் அளித்தல், ஊக்க மருந்துச் சோதனையில் சிக்கியவர்களைக் காப்பாற்றுவதற்காக ஆவணங்களை அளித்தல் போன்றவற்றில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே உலக ஊக்க மருத்து எதிர்ப்பு அமைப்பு இந்தத் தடையை ரஷ்யாவுக்கு விதித்துள்ளது.

இந்த தடையால் டோக்யோவில் நடைபெறவுள்ள 2020 ஒலிம்பிக் போட்டிகள், அமெரிக்காவில் நடைபெற இருக்கும் 2021 உலக சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் 2022இல் நடைபெறவுள்ள உதைபந்து உலகக் கிண்ணத் தொடர் ஆகியவற்றில் ரஷ்யா பங்கேற்க முடியாது.

2014ஆம் ஆண்டு ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பல ரஷ்ய வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து கடந்த 2015ஆம் ஆண்டு உலக ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் வெளியிட்ட அறிக்கையில், ரஷ்ய தடகள வீரர்கள் மிகப் பெரிய அளவில் ஊக்கமருந்து பயன் படுத்தியிருக்கின்றமையை பற்றி உறுதிப்படுத்தியது.

அதனைத் தொடர்ந்து ரஷ்ய தடகள வீரர்கள் தொடர்பான ஊக்கமருந்து சர்ச்சைகள் அதிகரித்தன. கடந்த இரண்டு ஒலிம்பிக் தொடர்களிலும் பல வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியிருப்பது தெரியவந்தது.

2014 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய அரசே முன்னின்று வீரர்களுக்கு ஊக்கமருந்து அளித்தது தொடர்பான தகவலை அடுத்து, கடந்த 2015 நவம்பர் மாதம் 15ஆம் திகதி தடை விதிக்கப்பட்டது.

இதனால் 2016 றியோ ஒலிம்பிக்கில் ரஷ்ய வீரர்களுக்கு பற்கேற்க முடியாமல் போனது. இதனைத்தொடர்ந்து கடந்த ஆண்டு நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யா பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

இந்தத் தடையை தொடர்ந்து, அந்நாட்டின் 168 வீரர்கள் கடந்த 2018ஆம் ஆண்டு தென்கொரியாவின் பியாங்யொங் நகரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பொது கொடி ஒன்றின் கீழ் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், மொஸ்கோவில் உள்ள ஊக்கமருந்து பரிசோதனைக் கூடத்தில் வீர, வீராங்கனைகளுக்கு எடுக்கப்பட்ட ஊக்கமருந்து சோதனை மாதிரிகளில் தவறான விவரங்களையும், போலியான விவரங்களையும் அளித்ததாகக்கடந்தமாதம்தகவல்வெளியானது.

இது தொடர்பாக சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் குழு விசாரணை நடத்தியதில் ரஷ்ய அரசே இதில் ஈடுபட்டு இருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து, குறித்த தடை ரஷ்யாவுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின் லாசேன் நகரில் உலக ஊக்கமருந்து தடுப்பு ஆணையத்தின் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது அடுத்துவரும் நான்கு வருடங்களில் நடைபெறவுள்ள எந்தவொரு சர்வதேசப் போட்டியிலும் பங்கேற்க ரஷ்யாவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே 2020 டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் 2022 உலகக் கிண்ணப் போட்டிகளில் ரஷ்யாவின் தேசிய கீதமும் கொடியும் அனுமதிக்கப்படமாட்டாது.

அத்துடன், ரஷ்ய வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தவில்லை என்பதை நிரூபிக்கும் பட்சத்தில், பொதுவான கொடியின் கீழ் அந்த போட்டிகளில் பங்கேற்கலாம்.


மேலும், ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறுவது தொடர்பாக ரஷ்யாவில் உலக சம்பியன்ஷிப் போட்டி நடத்தும் தகுதியும் ரத்துச் செய்யப்படவுள்ளது.

இந்த அனைத்து முடிவுகளுக்கும் சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையத்தின் நிர்வாகிகள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதேசமயம், ரஷ்யாவைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் முக்கியமான சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கலாம். ஆனால், அவர்கள் ஊக்கமருந்துப் பரிசோதனையில் சிக்கி இருக்கக் கூடாது. அவர்களின் ஊக்கமருந்து தொடர்பான புள்ளிவிவரங்கள் திருத்தப்பட்டு இருக்கக் கூடாது என்று சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் தெரிவித்துள்ளது

இதேநேரம், உலக சம்பியன்ஷிப் போட்டி, உலகக் கிண்ண உதைபந்து தகுதிச்சுற்று போன்றவற்றில் ரஷ்ய அணிகள் பங்கேற்கலாமா என்பது குறித்துத் தெளிவான அறிவிப்பு இன்னும் வெளியிடவில்லை. இதேவேளை, இந்தத் தடை உத்தரவை எதிர்த்து ரஷ்யா அடுத்த 21 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ரோஜர் பெடரருக்கு நாணயத்தில் கௌரவம்




ரென்னிஸ் ஜாம்பவானாக திகழும் ரோஜர் பெடரரின் உருவத்தை அவர் வாழும் காலத்திலேயே வெள்ளி நாணயத்தில் பதித்து சுவிற்சர்லாந்து அரசு கௌரவித்துள்ளது. அந்த நாட்டு 20 பிராங்க் வெள்ளி நாணயத்தில் ரோஜர் பெடரரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

ரென்னிஸ் உலகின் பிக் த்ரீ எனப்படும் நடால், பெடரர், ஜோகோவிச் ஆகியோரில் முதன்மையானவா ரோஜா பெடரர் ஆவார்

சுஸ்விற்சாலாந்தின் பேஸல் நகரில் 1981 ஒகஸ்ட் 8 ஆம் திகதி பிறந்த பெடரர், கடந்த 15 ஆண்டுகளாக ரென்னிஸ் உலகில் அசைக்க முடியாத வீராகளில் ஒருவராகத் திகழ்ந்து வருகிறார். அவர் இது வரை 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

உலகிலேயே அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் என்ற பெருமையையும் அவர் கொண்டுள்ளார்.

மேலும் 2003, 2004, 2006, 2007, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் ஏடிபி வோல்ட் டூர் இறுதிப் போட்டியிலிலும் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

8 விம்பிள்டன், 6 ஆஸி. பகிரங்கப் போட்டிகள், 5 யுஎஸ் ஓபன் அனைத்தையும் தொடர்ச்சியாக வென்றுள்ளார். அதேவேளை, ஒரே ஒரு பிரெஞ்சு ஓபன் பட்டம் என மொத்தம் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

மேலும் 31 முறை கிராண்ட்ஸ்லாம் போட்டி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார். அவரது வெற்றிகளில் 28 ஏடிபி மாஸ்டாஸ் 1000 பட்டங்கள், 24 ஏடிபி மாஸ்டா 500 பட்டங்கள், 2014 இல் டேவிஸ் கோப்பை சாம்பியன் பட்டம் வென்ற சுஸ்விற்சர்லாந்து அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

அமெரிக்க வீரர் ஜிம்மி கானாஸ்க்கு அடுத்து 100 முறைக்கு மேல் ஒற்றையர் பட்டங்களை வென்றவர் என்ற சாதனையும் அவா வசமுள்ளது. விளையாட்டுத் துறையில் உயாந்த விருதுகளில் ஒன்றான லாரஸ் உலக விளையாட்டு வீரர் விருதை 5 முறை வென்றுள்ளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சாதனைகளுக்கு உரியவரான ரோஜர் பெடரருக்கு சுவிற்சர்லாந்து அரசு மேலும் கௌரவம் அளித்து புகழ் சோத்துள்ளது. ஸ்விஸ் மின்ட் எனப்படும் அந்த நாட்டு வெள்ளி நாணயத்தில் பெடரரின் உருவத்தைப் பொறித்துள்ளது. வாழும் காலத்திலேயே இத்தகைய சிறப்பு பெற்ற வீரர் பெடரர் ஆவார்.

20 சுவிஸ் பிராங்க் நாணயங்களில் பெடரரின் உருவம் அச்சிடப்பட்டு, எதிர்வரும் 2020 ஜனவரி மாதம் புழக்கத்துக்கு விடப்படுகிறது.

பெடரரின் உருவம் பதித்த 33,000 வெள்ளி நாணயங்கள், இணையத்தளத்தில் மொத்தம் விற்பனை ஆகிவிட்டது. இதனால் எதிர்வரும் ஜனவரி 23 ஆம் திகதி மேலும் 22,000 நாணயங்களும், 2020 மே மாதம் 40,000 நாணயங்களும் விற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வெறும் 3 நாள்களில் 1.3 கோடி பேர் இணையதளத்தில் இதற்காகக் காத்திருந்தனர்.

அதேவேளை, எதிர்வரும் மே மாதம் 50 பிராங்க் மதிப்பு கொண்ட பெடரரின் உருவம் பதித்த தங்க நாணயமும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் பெயரைப் பாவித்து மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

கொழும்பு, டிசெ. 11
ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதாகத் தெரிவித்து அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றவியல் பிரிவினரால் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராஜாங்கனை மற்றும் செவனகல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தம்புத்தேகம பிரதேசத்தில் வசித்து வரும் பெண் ஒருவரிடம் ஒன்றரை இலட்சம் ரூபாயைப் பெற்றபோதே சந்தேக நபர்கள் கைதாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# யாழிலிலிருந்து ஜனாதிபதி செயலகம் வரை நடை பயணம் மேற்கொள்ளும் சகாதேவன்!




யாழ்ப்பாணம், டிசெ. 11
சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரை நடை பயணத்தை இன்று ஆரம்பிக்க வுள்ளார் என வி.சகாதேவன் என்பவர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – மஹிந்த தேரரால் தேவநம்பிய தீசன் மன்னனுக்கு வாக்குறுதி ஒன்று வழங்கப்பட்டது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக அவரது சகோதரியும், அசோக சக்கரவர்த்தியின் மகளுமான சங்கமித்தாதேவியால் புத்த பகவான் ஞான ஒளி பெற்ற புனித கயாவில் இருந்து புனிதமான வெள்ளரசு மரத்தின் கிளையானது 2300 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்ற தொரு மார்கழி தினத்தில் கொண்டு வரப்பட்டது.

அதே போன்றதொரு தினமாக இன்றைய மார்கழி பௌர்ணமி தினம் அமைகிறது.

அதே நாளில் நான் புதிய அரசுக்கும், பிரதமருக்கும் அரசு தலைவர் மற்றும் அவர்களது ஒற்றுமையான குடும்பத்தினருக்கும் இந்த நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் தமிழ் மக்களின் நல்ல நோக்கம் நல்ல எண்ணத்தோடு கூடிய சமாதானச் செய்தியை அறிவிப்பதற்காக இந்த சமாதான நடை பயணத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளேன்.

நான் இந்தப் பயணத்தை ஆரம்பிக்க உள்ள இடம் வரலாறு, சமயம், கலாசாரம் ஆகியவற்றை இலங்கைக்குத் தொடர்புபடுத்திய முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

இந்த இடம் பௌத்தர்களினால் சம்புமல் துறை என்றும் சங்கமித்தாதேவி என்ற மாது கரையிறங்கிய படியால் மாதகல் என்றும் தமிழில் அழைக்கப்படுகிறது.

இந்த புனிதமான இடத்திலிருந்து தொடங்கும் எனது நடை பயணம் கடந்த காலத்தை நினைவூட்டும் விதமாகவும் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளடங்கிய அரசிடம் ஒரு சமாதான செய்தியை அறிவிப்பதற்காகவும் ஓர் உயிருள்ள அரச மரக்கன்றுடன் ஆரம்பிக்கின்றேன்.

இதனை தமிழ் மக்களின் சார்பில் புதிய ஜனாதிபதிக்குக் கையளிப்பதே எனது நோக்கமாகும்.

இதன் வேர்கள் தெற்கிலே சமாதானத்தை ஆழமாகப் பதித்து வேரூன்றி, சிங்கள மக்கள் நேசிக்கும் புத்த பகவானின் போதனைகளைப் போல தழைத்தோங்கிட வேண்டும்.

இந்தச் சமாதானம் சகல இன மக்களிடையேயும் துளிர்த்து வேர்விட செய்ய வேண்டும்.

இந்தச் சமாதான அறிவிப்பானது நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள். உள்ளிட்ட அரசை நடத்திச் செல்லும் புதிய பிரதமர் மஹிந்த மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ஆகியோருக்கு ஆற்றலையும் நம்பிக்கையும் பெருகப் பண்ணட்டும். புதிய தேசம் ஒன்றை ஒன்றாக சேர்ந்து கட்டி எழுப்புவோம் – என்றார்.

# ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்காமை பாதிப்பை ஏற்படுத்தாது!

## கூறுகிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்



கொழும்பு, டிசெ. 11
இந்தியாவில் வசித்து வரும் ஈழத் தமிழர்கள் நாடு திரும்பவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாக உள்ளதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வசிக்கும் ஈழ அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படாதுள்ளமையை ஒரு பாதிப்பான விடயமாகக் கருத முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அகதிகளாக வசிக்கும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான சட்டவரைவு நேற்று முன் தினம் இந்திய மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது ஈழத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை கிடையாது என்று வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நித்தியானந்த் ராய் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிடும்போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான தீர்வை விரைவிலேயே பெற்றுக்கொடுக்க இந்தியா உதவி செய்யவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ஐ)

# ஆஸ்திரேலியத் தூதுவர் மஹிந்தவுடன் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 11
ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹொலிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொறிசனின் வாழ்த்துச் செய்தியை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் டேவிட் ஹொலி கையளித்தார்.

மேலும் உல்லாசப்பயணத்துறை, கல்வி தொடர்பாகவும் பிரதமருடன் அவர் கலந்துரையாடினார் எனக் கூறப்பட்டது. (ஐ)

# சரத் அமுனுகம ஓய்வு

கொழும்பு, டிசெ. 11
நாடாளுமன்ற அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனால் தனக்கு எவ்வித வருத்தமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற அரசியலில் இருந்து ஓய்வு பெற்றாலும் தனது மக்கள் சேவை போன்று ஏனைய அரசியல் நடவடிக்கைகள் அப்படியே தொடரும் என அவர் குறிப்பிட்டார்.

தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்றும், அதில் எவ்வித மாற்றங்களும் இல்லை எனவும் சரத் அமுனுகம மேலும் கூறினார். (ஐ)

# இலக்கின்றி தேர்தலில் இறங்கும் வேட்பாளர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 11
எதிர்வரும் தேர்தல்களில் எவ்வித இலக்கும் இன்றி மறைமுகமாக பிறிதொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலிலும் மாகாணசபைத் தேர்தலிலும் இவ்வாறு பிறிதொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில் போட்டியிடும் வேட்பாளர், கட்சிகள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக அதன் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மறைமுகமாக பிறிதொரு வேட்பாளருக்கு ஆதரவளிக்கும் நோக்கில் பெரும்பாலான வேட்பாளர்கள் செயற்பட்டனரென ஆணைக்குழு இனங்கண்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகின.


அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இது தொடருமா என்பது குறித்து குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் கட்டுப்பணத்தை அதிகரிப்பது தொடர்பாக இதுவரை முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)



(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பதிப்பு பாரதி நூற்றாண்டு காலத்தில் டிசெம்பர் 11 ஆம் திகதி 1982 இல் வெளியானது. இந்த அரிய தொகுப்பில் 1917 ஒளிப்படங்கள் பதிவாகியிருக்கின்றன.



இதனைத் தொகுத்திருக்கும் ரா.அ.பத்மநாபன் 1934 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆனந்த விகடன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் பாரதியாரின் ஓர் ஒளிப்படம் அவர் வசம் கிடைத்திருக்கிறது. அதனை அச்சமயம் ஆனந்த விகடன் ஆசிரியராக பணியாற்றிய கல்கி அவர்களிடம் காண்பித்துள்ளார்.

பின்னர் அந்த அரிய படம் பிரதி எடுக்கப்பட்டு ஊடகங்கள் பலவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவ்வேளையில் பாரதியின் வரலாற்றைச் சரித்திரபூர்வமாக ஆராய்ச்சி செய்து தொகுப்பொன்றை வெளியிடும் பணியில் பத்மநாபன் இறங்கியிருக்கிறார்.

அதற்காக பாரதி வாழ்ந்த எட்டயபுரம், காசி, புதுவை, கடயம் எங்கும் பயணித்து படங்களையும், செய்திகளையும், பத்திரிகைகளையும் சேகரித்திருக்கிறார்.

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடு எப்படி இருந்தது என்பதை அறிமுகப்படுத்தும் பாங்கில் தொடங்குகிறது இத்தொகுப்பின் முதல் அங்கம். எட்டயபுரம் பற்றிய அறிமுகக் கட்டுரையில் எட்டயபுர மன்னர்கள், எட்டயபுரம் அரண்மனை ஆகிய படங்கள் இடம் பெறுகின்றன.

பாரதி 1919 இல் சீட்டுக் கவி எழுதிய வெங்கடேசுர எட்டப்பநாயக்கரின் தகவல் சொல்லப்படுகிறது.

இந்நூலில் மற்றும் ஒரு சுவாரசியமான தகவல்: பாரதியாரின் ஜாதகக் குறிப்பும் இடம் பெற்றிருப்பதுதான். மதுரையில் வெளியான விவேக பாநு(1904) இதழில் முதல் பிரசுரம் கண்ட பாரதியின் தனிமை இரக்கம் என்ற கவிதை தோன்றிய கதையும் சொல்லப்படுகிறது.


காசியில் வாசம் செய்த காலப் பகுதியில் ஒரு பாடசாலையில் மாதம் இருபது ரூபா சம்பளத்திற்கு பணியாற்றியிருக்கும் பாரதி, சரஸ்வதி பூசையன்று, ஒரு கூட்டத்தைக் கூட்டிப் பெண் கல்வி என்ற தலைப்பிலே பேசியிருக்கிறார். அதில் பெண்கள் கல்வியின்றித் தேசம் முன்னேறாது என்று வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

பாரதியாரைக் கைது செய்வதற்காக பிரிட்டிஷ் அரசினால் உளவாளியாக அனுப்பப்பட்ட ஒரு துப்பறியும் பொலிஸ்காரரின் டயறிக் குறிப்பினையும் கையெழுத்துடனேயே தேடி எடுத்து பதிவு செய்துள்ளார் தொகுப்பாளர்.

சென்னை பாரதியார் சங்கத்தின் சார்பில் அதன் அப்போதைய தலைவர் நா. மகாலிங்கள் இந்த தொகுப்பிற்கான பதிப்புரையை எழுதியுள்ளார். 230 பக்கங்களுக்கும் மேற்பட்டது இந்த தொகுப்பு.

### பாரதியின் கருத்துப் படங்கள்


இதழியல் துறையை பொறுத்த மட்டில் கார்ட்டூன் எனப்படும் கருத்துப் படத்தை தமிழுக்கு முதல் முதலில் அறிமுகப்படுத்தியவர் பாரதியார். அவர் வாழ்ந்த காலம் இந்தியா, அந்நிய ஏகாதிபத்தியத்தின் கொடுங்கரங்களில் சிக்கியிருந்து 'பிரிட்டிஷ் இந்தியா' என்ற பெயருடன் விளங்கியது.




பாரதி தாம் பொறுப்பேற்று நடத்திய 'இந்தியா' என்ற அரசியல் வார இதழில் கருத்துப் படங்களை வெளியிட்டுத் தமிழ் –இந்திய இதழியல் துறையிலும் முன்னோடியாக விளங்கினார் என்பது பரவலாக அறியப்படாத செய்தி. ஆனால், பாரதியின் கவிதைகள், உரைகள், படைப்பாற்றல் தமிழ் உலகெங்கும் பரவலாக அறியப்பட்ட செய்தி. அதனால், அறியப்படாத பாரதியின் கருத்துப்பட பக்கம் பற்றி வரலாற்றுப் பின்னணிகளுடன் விரிவாகப் பேசுகிறது பாரதியின் கருத்துப் படங்கள் என்ற தொகுப்பு.

1850 ஆம் ஆண்டு முதல் டில்லியிலிருந்து வெளியான Delhi Sketch Book தான் இந்தியாவில் முதல் முதலாக கருத்துப் படங்களை வெளியிட்டுள்ளது. 1857 இல் கிளர்ச்சியாளர்கள் டில்லியை முற்றுகையிட்டதையடுத்து இதன் வருகை நின்றிருக்கும் தகவலையும், அதன் பின்னர் The Indian Punch என்ற இதழ் தொடர்ந்து கருத்துப்படங்களை வெளியிட்டிருக்கும் செய்தியையும் தொகுப்பாசிரியர் வெங்கடாசலபதி தெரிவிக்கின்றார்.

இந்தியா இதழில் வெளியான ஒவ்வொரு கருத்துப் படத்திற்குமான விளக்கக் குறிப்புகளும் இந்நூலில் பதிவாகியிருப்பதனால் அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.



பாரதி, அன்றைய அரசையும் அதிகாரத்தையும் அங்கதச் சுவையுடன் சித்திரித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் உழைத்திருக்கிறார்.

பாரதியின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் தீர்க்க தரிசனமானவை. எதிர்காலத்தில் இதழியல் துறையும் கருத்துப் படங்களின் ஊடாக மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அன்றே, அத்தனை அரசியல் நெருக்கடிகளுக்கும் மத்தியிலிருந்து சிந்தித்திருக்கிறார்.

சமகாலத்தில் நாளாந்தம் வெளியாகும் செய்தி ஏடுகளைக் கையில் எடுக்கும் வாசகர்களில் பெரும்பாலனவர்களை கவர்வதும் இந்த கருத்துப் படங்கள்தான்.

கருத்துப் படங்களில் தாம் எவ்வாறு சித்திரிக்கப்படுவோம் என்ற அச்சத்துடன் தினமும் பத்திரிகைகளைப் பார்க்கும் அரசியல் தலைவர்களும் சமகாலத்தில் எம் மத்தியில் நடமாடுகின்றனர்.

இந்தப் பதிவில் அறிமுகப்படுத்தப்படும் இரண்டு தொகுப்புகளும் ஊடகவியலாளர்களுக்கும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் பாரதி இயலை கற்க விரும்பும் மாணவர்களுக்கும் சிறந்த உசாத்துணை ஆவணங்களாகும்.

பாரதி என்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பார்.

முருகபூபதி

## சமய ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு







மறையாசிரியர்களின், அறநெறி ஆசிரியர்கள், அஹதியா ஆசிரியர்களுக்கான ஆற்றுப்படுத்தல் தொடர்பான கருத்தமர்வு கடந்த சனிக்கிழமை யாழ் கியூடெக் கரிதாஸ் நிறுவனத்தில் கலாநிதி யோ. ஜோசப்பாலா தலைமையில் நடைபெற்ற போது, வளவாளர்களாக அ.செல்வநாயகம், பரமநாதன், விஜிதன், மௌலி எம்.ஏ.சி. ஜாபிர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட மூவின சமய ஆசியர்களுக்கு "மகிழ்வூட்டும் கற்பித்தல்" தொடர்பான கருத்தமர்வு இடம்பெற்றது.

படம் - எம்.எல்.லாபிர்

















நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வயது முதிர்ந்த கலைஞர்கள் 10 பேர் தெரிவு செய்யப்பட்டு அவரவர் வீடுகளுக்கு அதிகாரிகள் நேரில் சென்று நலம் விசாரித்து அவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் பாராட்டுப் பத்திரமும் வழங்கி அவர்களை கௌரவப் படுத்தினர்.

நெடுந்தீவு பிரதேச செயலக செயலாளர் சத்தியசோதி, பட்டதாரிப்பயிலுனர் அஜித் குமார், யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார் ஆகியோர் நேரில் சென்று இந்தப் பரிசுகளை வழங்கினர்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் ... ஆஸ்திரேலியா



# ஜோதிப் பிளம்பு வடிவில் கடவுளை நாம் தரிசிக்கும் கார்த்திகைத் தீபத் திருவிழா

"ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" என்று இறைவனை மனமெண்ணி துதிப்பதும், பிரார்த்தனை செய்வதும், பாடுவதும், ஆடுவதும் , நடைமுறையில் இருந்து வரு கின்றவை. இறைவனைக் கண்டோமா என்றால் அதற்குச் சரியான பதிலை எம்மால் சொல்லிவிட முடியாமலே இருக்கி றோம். ஆனாலும் இறைவன் இருக்கி றான் என்பதைப் பலரும் நம்பியே இவ் வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறைவனைக் கல்லிலும், செம்பிலும், மண்ணிலும், மரத்திலும், பொன்னிலும், நிலத்திலும், நீரிலும், காற்றிலும், தீயிலும், ஒளியிலும், ஒலியிலும், மழையிலும், இடியிலும் என்று பல நிலைகளில் காண முற்படுகின்றோம். இந்த வகையில் ஒளிவடிவில் இறைவனை மனமிருத்தும் தத்துவார்த்தமான விழாவாக விளங்குவதுதான் கார்த்திகை மாதத்தில் வருகின்ற 'திருவிளக்குத் திருவிழா' எனலாம்.


தீபத்திருவிழா என்றதும் "தீபாவளி" பண்டிகைதான் எங்கள் மனதில் வந்து முதலில் நிற்பதாகும். உண்மையில் கார்த்திகையில் வருகின்ற விழாவினைத்தான் "தீபாவளி" என்று கொள்ளுதல் வேண்டும் என்னும் ஒரு கருத்தும் இன்று பரலாகி வருகிறது என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும். தீவ + ஆவலி என்றால் தீபங்களை வட்டமாக வைப்பதாகும். கார்த்திகை விழாவிலும் தீபங்கள் வரிசையாயும் வட்டமாயும் வீட்டு வாசல்களில் வைக்கப்படுகின்றன. கோவில்களிலும் வைக்கப்படுகின்றன. எனவே கார்த்திகையில் வருகின்ற "திருவிளக்குத் விழாவினை" தீப ஒளித் திருநாள் என்றால் பொருந்தாதா என்று கேட்கும் நிலையும் உருவாகி வருகிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தாக இருக்கிறதல்லவா?

"தீபாவளி" எனும்பொழுது ஆணவம் அடங்கிய நிலை அடையாளப்படுத்தப்படுகிறது. கார்த்திகை தீபத்திருவிளக்கு விழாவும் ஆணவம் அடங்கிய நிலையினயே காட்டி நிற்கிறது. தீபாவளியில் திருமால் இணைக்கப்படுகிறார். கார்த்திகைத் தீபத்திருவிளக்கு விழாவில் சிவன் இணைக்கப்படுகிறார். சிவன் என்பதோ திருமால் என்பதோ முக்கியமல்ல. இறை என்பதுதான் இங்கு முக்கியமாகும். அதாவது ஆணவம் அடங்கினால் இறையின் தரிசனம் கிடைக்கும் என்பதுதான் இதன் உண்மையான தத்துவமாக பொதிந்து கிடக்கிறது எனலாம்.



அடிமுடி தேடிய வரலாறு, ஆறுமுகப் பெருமான் தோன்றிய வரலாறு என்று பல வரலாறுகள் கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. இங்கெல்லாம் முக்கியத்துவம் பெற்று நிற்பது ஒளியேயாகும். அடி முடி வரலாற்றில் இறைவன் ஜோதிப் பிளம்பாக வந்தார் என்பதும், ஆறுமுகன் வரலாற்றில் இறைவனின் நெற்றிக் கண்ணில் தோன்றிய ஒளிப் பொறியே ஆறுமுகனாகக் கொள்ளப் பட்டார் என்றும் கருதும் நிலையிலும் ஒளிதான் முக்கியம் பெற்று நிற்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

ஆதிகாலத்து மனிதன் வாழ்க்கையில் ஒளி மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்தது. இருளைக் கண்டால் பயந்த மனிதன் ஒளியைக் கண்டபொழுது உவகை உற்றான். ஒளி எப்படி வருகிறது என்பதை அவனால் அறிய முடியவில்லை. இதனால் ஒளி என்பது உயர்வானது என்னும் கருத்து அவனின் உள்ளத்தினுள் இறுக்கமாய் அமர்ந்து கொண்டே விட்டது எனலாம். மனித வரலாற்றில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் பின்னர் அறம் என்றும் நீதி என்றும் கடவுள் என்றும் சமயம் என்றும் ஏற்பட்ட பின்னரும் கூட ஒளியின் இருக்கை என்பதும் முக்கியத்துவத்தை இழக்காமலே தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அதன் நிலையினையே கார்த்திகை திருவிளக்குத் திருவிழாவாக மாறியிருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா ?



இந்து சமயத்தில் விளக்கு என்பது மிகவும் முக்கியத்துவம் பெற்று நிற்கிறது. எந்தவொரு நிகழ்ச்சியானாலும் விளக்கு இல்லாமல் அந்த நிகழ்ச்சி இடம்பெறவே மாட்டாது. மங்கலம் என்னும் அரிய கருத்து விளக்குடன் இணைக்கப்பட்டே விட்டது. விளக்கினை சகல செல்வங்களும் தரும் இலக்குமி ஆகவே ஆக்கியும் விட்டார்கள். இறைவழி பாட்டில் ஒளியின் இடம் மிகவும் இன்றியமையாததாகும். ஒளியின் அடையாளங்களாகப் பல விளக்குகள் கோவில்கள் தோறும் இருக்கின்றன. இறைவனுக்கு நடைபெறும் பூசையின் பொழுது காட்டப்படும் பலவித தீபங்கள் அனைத்துமே ஒளியின் வெளிப்பாடே எனலாம்.



கார்த்திகைத் திருவிளக்குத் திருவிழா என்றால் எல்லோர் எண்ணங்களிலும் திருவண்ணாமலைதான் முன் வந்து நிற்கும். அங்குதான் இவ்விழா மிகவும் பக்திபூர்வமாக நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது. அதுமட்டுமல்ல பஞ்சபூதத் தலங்களில் அக்கினிக்குரிய தலமாகக் கொள்ளப்படுவதும் திருவண்ணாமலைத் தலமேயாகும். அக்கினிக்கான தலத்திலே கார்த்திகைத்திருவிளக்குவிழாவினைச்செய்வதுதான் மிகவும் பொருத்தம் என்னும் ஐதீகம் தொடர்ந்து கொண்டே வருவதால் திருவண் ணாமலைக் கார்த்திகைத்தீப விழா இந்துக்களின் முக்கிய சமயவிழாவாக அமைந்து விட்டது.

திருவண்ணாமலையின் உச்சியில் மிகப்பெரிய தீபம் ஏற்றப்படுகிறது. அல நாள்கள் எரியும் இத்



தீபம் அறுபது மீற்றர் வரை ஒளியினைக் காட்டி நிற்கும். அண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகைத் தீபம் என்பது திருவிளக்கின் விஸ்வரூபம் ஆகும் எனலாம். இத்தீபங்கள் ஏற்றப் படுவதால் பலனுண்டா என்னும் வினாவும் இல்லாமல் இல்லை. இந்து சமயத்தில் நம்பிக்கைகள் பல இருக்கின்றன. ஆனால் மூட நம்பிக்கைகளை விதைக்க முற்படுவதால்தான் கடவுளையோ சமயத்தினையோ கேள்விக்கு ஆளாக்கும் நிலை ஏற்படுகிறது எனலாம். எக்காரியத்துக்கும் அர்த்தம் இல்லாமல் இந்துசமயம் இருக்கவில்லை என்பது மனமிருத்த வேண்டிய கருத்தாகும். அர்த்தத்தை மக்கள் மனதில் அமர்த்திட அங்கு இறை நம்பிக்கையை இணைத்திருக்கிறது என்பதை விளங்கிக் கொண்டால் எந்தச் சிக்கலுக்கும் இடமிருக்காது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

பெருந்தீபங்கள் ஏற்றுவதால் புயல் தோன்றுவது தடுக்கப்படும் என்றும் அப்படிப் புயல் தோன்றுமாயின் அதன் வேகம் தணிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

திருவிளக்குகள் ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையில் உள்ள இணைப்பை உணர்த்தி நிற்கின்றன. விளக்கில் எரிகின்ற சுடரானது நமக்கு நன்றாகத் தெரியும் புறத்தோற்றமாகும். ஆனால்அந்தச்சுடரானது எண்ணெயை மெல்ல மெல்ல கிரகித்தே எரிகிறது என்பது நாமுணரவேண்டிய அகத் தோற்றமாகும். வாழ்க்கையில் தெளிவான புறத்தோற்றத்தையும் அதற்கு அடிப்படையான நுட்பமான அகத்தோற்றத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டு என்பதை எடுத்துக்காட்டி நிற்பதே தீபவழிபாட்டின் உட்கருத்தாகும்.

மிருகத்துடன் காட்டில் வாழ்ந்த மனிதன் நாளடைவில் காட்டைவிட்டு நாட்டுக்கு வருகிறான். நாட்டினை உருவாக்கித் தனது வாழ்வினை வளமாக்குகின்றான். அவ்வழியில் சமயம் முகிழ்க்கிறது. கடவுள் நம்பிக்கை எழுகிறது. மனிதனே தனக்கான வழிபாட்டு முறைகளை உருவாக்குகிறான். இங்குதான் நம்பிக்கை என்பது தலைமை வகிக்கிறது. அந்த நம்பிக்கைதான் கடவுளையே தோற்றுவிக்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் பல கதைகள் உருவாகின்றன. அக்கதைகள் நம்பக்கூடியனவா,நம்ப முடியாதனவா என்பது விவாதம் அல்ல. அக்கதைகள் மனிதனை நல்வழிப் படுத்த உதவியாய் அமைந்தன என்பதை மறுத்துவிட முடியாது.

இந்த வகையில் உருவான பல புராணங்களை விமர்சனம் செய்வதோ அல்லது கிண்டல்,கேலி செய்வதோ பொருத்தம் உடையனவாகத் தெரியவில்லை. தத்துவங்களை அப்படியே சொன்னால் ஏற்றுக் கொள்ளுவது என்பது மிகவும் கடினமாகும். அதனால் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் உண்மைகளும் தத்துவங்களும் நல்லவடிவில் – கதை என்னும் வடிவமாக்கப்படும் – தேவை அவசியமானது. அந்த வகையில் கார்த்திகை திருவிளக்கு விழா பற்றி புராணக்கதைகள் பல இருக்கின்றன. அவற்றை நம்புவதா ? அப்படியெல்லாம் நடக்குமா? என்றெல்லாம் எண்ணும் பாங்கினை விட்டுவிட்டு மனித வாழ்வினை வையத்துள் வாழ் வாங்கவாழ உதவும் நல்ல கருத்துக்களை சமயத்தின் ஊடாகவும் இறையென்னும் மெய்பொருளின் ஊடாகவும் காண்பதும் கருத்திருத்துவதுமே பண்புடை செயலாகும். அந்தவகையில் கார்த்திகைத் திருவிளக்கு விழாவினை மனமிருத்துவோம்! ஒளிமயமாக இறைவனைக் காண்போம். ஒளிமயமான எதிர்காலத்தை எதிர்பார்த்து இருப்போம். ஜோதிப் பிளம்பாக இறையினைக் காணுவோம்!

# அமைச்சர்களின் ஆளணியில் உறவினர்கள் இருக்கக்கூடாது

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு



கொழும்பு, டிசெ. 11

அமைச்சர்கள் அல்லது இராஜாங்க அமைச்சர்கள் தமது ஆளணி நியமனத்தின்போது உறவினர்களை நியமிக்கக்கூடாதென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னதாக அமைச்சர்கள் தமது அலுவலக ஆளணி நியமனத்தின்போது உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்தனர். அமைச்சரின் தனிப்பட்ட செயலாளராக அவரது மனைவி அல்லது பிள்ளைகளை நியமிக்கும் ஏற்பாடுகளே இருந்தன.

ஆனால் இந்த நடைமுறை இனித் தொடரக் கூடாதென உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி, அமைச்சருக்கும் ஆலோசகர் பதவியில் ஒருவரை மட்டுமே நியமிக்க முடியுமெனவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

# டெங்குக் காய்ச்சலால் சிறுமி சாவு

திருமலை, டிசெ. 11

திருகோணமலை பொது வைத்தியசாலையில் டெங்குக் காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெறுவதற்கு சென்ற சிறுமி ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மூன்றாம் கட்டை பகுதியைச் சேர்ந்த வீ. கிரோபிதா (வயது -13) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக மருந்து எடுப்பதற்காக வருகை தந்திருந்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னரே உயிரிழந்துள்ளார் என்றும், ஏற்கனவே காய்ச்சல் காரணமாக அவர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 1733 டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இந்த வாரத்தில் மாத்திரம் திருகோணமலை மாவட்டத்தில் 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்வு;

# சந்தேக நபர்கள் இரண்டு பேரையும் அடையாளம் காண்பித்த சாட்சிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 11

சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டர் சந்தேகநபர்கள் இருவரும் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர். அதனால் சந்தேகநபர்கள் இருவரது விளக்கமறியலும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கோப்பாய், இருபாலையில் கடந்த மாதம் 15ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கோப்பாய், இருபாலையில் ஒழுங்கை ஒன்றில் நின்று 14 வயதுச் சிறுமியும் அவரது நண்பரும் கதைத்துக் கொண்டிருந்தபோது, அந்த வழியால் வந்த இருவர் அவர்களை மிரட்டியுள்ளனர்.

மதுபோதையில் இருந்த அந்த நபர்கள் இருவரும் சிறுமியின் நண்பரைத் தாக்கியுள்ளனர். அவர்களில் ஒருவர் சிறுமியை அச்சுறுத்தி தனது மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றதுடன், மற்றையவர் சிறுமியின் நண்பரை மிரட்டித் தடுத்து வைத்திருந்துள்ளார்.

சிறுமியை ஒதுக்குப் புறம் ஒன்றுக்கு அழைத்துச் சென்ற ஒருவர் அவரை சித்திரவதை செய்து வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார்.

வீடுதிரும்பிய சிறுமி, சம்பவம் தொடர்பில் தாயாரிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமியும் தாயாரும் கோப்பாய் பொலிஸ் கடந்த 23ஆம் திகதி முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

சிறுமியின் நண்பரை அழைத்து விசாரணை செய்த பொலிஸார், அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த 26ஆம் திகதி முற்படுத்தப்பட்டனர்.

சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் 'பி' அறிக்கை தாக்கல் செய்திருந்த பொலிஸார், சந்தேகநபர்கள் இருவரையும் அடையாள அணிவகுப்புக்கு உள்படுத்த விண்ணப்பம் செய்தனர்.

அதனடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அடையாள அணிவகுப்பை நடத்த மன்று உத்தரவிட்டது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அடையாள அணிவகுப்புக்கு சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியும், அவரது நண்பரும் தனித்தனியே அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்களை அடையாளம் காண அழைக்கப்பட்டனர். சிறுமியும் அவரது நண்பரும் எந்தத் தயக்கமுமின்றிச் சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினர்.

சந்தேகநபர்கள் இருவரது விளக்கமறியலை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நீடித்து மன்று உத்தரவிட்டது.

# முல்லைத்தீவில் நேற்று பண்பாட்டு பெருவிழா







முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவில் பண்பாட்டுப் பெருவிழா, பாரம்பரிய கலை விழிப்புணர்வு பவனியுடன் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன், துணுக்காய் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து இந்தப் பண்பாட்டுப் பெருவிழாவை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் முன்னதாக முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் பிரதான வீதியிலிருந்து பாரம்பரிய கலைகளையும் வாழ்க்கை முறைகளையும் சித்தரிக்கும் ஊர்திப் பவனிகளுடன், அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இதனையடுத்து பிரதேசத்தின் பல்துறை சார்ந்தோர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மருதோவியம் இதழ் 3 நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் பண்டார வன்னியன் வரலாற்று நாடகம் மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகதர்கள், திணைக்களத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# போரால் பாதிப்புற்ற பெண்களுக்கு கடைத் தொகுதி: வலி.கிழக்கு பிரதேச சபையால் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 11

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் கோப்பாயில் ஆரம்பிக்கப்படவுள்ள இயற்கை உணவுப்பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்யும் விற்பனை நிலையத்தில் வியாபார முயற்சிகளில் ஈடுபட ஆர்வமுள்ளப் போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோப்பாய் சந்தை கட்டடத் தொகுதியில் ஒன்பது கடைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் பகிரங்க கேள்வி நடைமுறைகளின் பிரகாரம் சலுகைகளுடன் கூடியதாக போரினால் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளவர்களிடம் இருந்தே முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன.

இயற்கை மற்றும் உள்ளூர் உற்பத்தி உணவுப் பொருள்களைச் சந்தைப்படுத்தக்க ஆற்றலும் ஆர்வமும் உடைய வசதிக்குறைவான வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களிடம் இருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முன்னாள் போராளிகள் மற்றும் போரினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களைச் சேர்ந்தோர், அரசியல் கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்தோர், போரில் குடும்ப உறுப்பினர்களை இழந்தோர் போன்றோரில் தெரிவு செய்யப்படும் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்களுக்கு இக் கடைத்தொகுதியில் வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வலிகாமம் கிழக்கில் 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண் தலைமையுடைய குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்களில் தெரிவு செய்யப்படும் சிலருக்கேனும் தொழில் முயற்சிகளை ஏற்படுத்தவேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையிலேயே வலிகாமம் கிழக்கு பிரதேச சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

எதிர்வரும் ஏழு நாட்களுக்கிடையில் இக் கடைத்தொகுதிகளில் வியாபார முயற்சிகளில் ஈடுபட ஆர்வமுள்ளோர் விண்ணப்பங்களை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க முடியும் எனவும் அவர்களில் உரிய நடைமுறைகளுக்கு அமையத் தெரிவு வெசய்யப்படுவோருக்கு கடைகள் பகிர்தளிக்கப்படும்– என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.12.2019 இல் வெளியிடப்பெற்றது.